# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:14 வள்ளுவர் ஆண்டு 2030 புரட்டாதி 3 திங்கட்கிழமை (20-09-1999) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 25 5


## வவுனியாவில் புளொட் முகாம்கள் நேற்று படையினரால் சுற்றிவளைப்பு

### சிரேஷ்ட உறுப்பினர் சிலர் விசாரணையில்

வவுனியா, செப். 20

வவுனியாவில் உள்ள புளொட் அமைப்பின் முகாம்கள் படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு அங்கு தேடுதல்கள் இடம்பெற்று வருகின்றன.

கோயில் குளத்தில் உள்ள முகாம் நேற்று முன்தினமும்—

வைரவப் புளியங்குளத்தில் உள்ள முகாம் நேற்றும் -- பொலீஸாராலும் படையினராலும் சுற்றிவளைக்கப்பட்டன.

அந்த முகாம்களில் இருந்த சகல பொருள்களையும் படையினர் வாகனங்கள் மூலம் எடுத்துச் சென்றதாகக் கூறப்பட்டது.

அதே நேரம் — அந்த அமைப்பின் சிரேஷ்ட உறுப்பினர்கள் சிலர் பொலீஸாரினால் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்படுகின்றனர் என்றும் கூறப்பட்டது.

(இ-3-164)

## புதுக்குடியிருப்பு சம்பவம் பாப்பரசர் கவனத்துக்கு

வவுனியா, செப். 20

புதுக்குடியிருப்புச் சந்தை மீது மேற்கொள்ளப்பட்ட கிபிர் விமானத் தாக்குதலில் 22 பொது மக்கள் உயிரிழந்த விவகாரம் பாப்பரசரின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

வன்னி மறைமாவட்ட சமாதான மனித முன்னேற்ற ஆணைக்குழுவே பாப்பரசரின் கவனத்துக்கு இந்த விவகாரத்தைக் கொண்டு வந்துள்ளது.

அப்பாவி மக்கள் சந்தையில் கூடியிருந்த சமயம் இந்த தாக்குதல் இடம் பெற்றுள்ளது என்றும்—

இப்படியான சம்பவங்கள் இடம்பெறாமல் இருக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும்—

அந்த அமைப்பு பாப்பரசரைக் கேட்டுக்கொண்டுள்ளது.

(இ-3)

## இரு தரப்புக்கும் செஞ்சிலுவை வேண்டுகோள்

கொழும்பு, செப். 20

அரச படைகளும் விடுதலைப் புலிகளும் நடத்தும் தாக்குதல்களில் அப்பாவிப் பொது மக்கள் குறிவைக்கப்படக்கூடாது. வன்முறைகளைத் தூண்டும் நடவடிக்கைகளில் இந்த இரு தரப்பினரும் ஈடுபடாதிருக்க வேண்

(10 ஆம் பக்கம் பார்க்க)

# களுத்துறையில் 3 கைதிகள் நிலைமை கவலைக்கிடம்!

## மேலும் 100 பேர் நேற்று போராட்டத்தில் இணைவு

கொழும்பு, செப்டெம்பர். 20

'விசாரணை செய் அல்லது விடுதலை செய்' என்ற கோரிக்கையை முன்வைத்து களுத்துறைச் சிறைச்சாலைக் கூரைமீது கடந்த செவ்வாய்க்கிழமை முதல் உண்ணாவிரதம் அனுஷ்டித்து வரும் மூவரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்துக்கு ஆதரவாக மேலும் நூறு தமிழ்க்கைதிகள் உண்ணாவிரதப் போராட்டத்தில் நேற்றுக் குதித்தனர்.

விசாரணை மற்றும் வழக்குத் தாக்கல் எதுவும் இன்றி நீண்டகாலமாக களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளில்

(10 ஆம் பக்கம் பார்க்க)

### எல்லைக் கிராமங்களில்

## மூடப்பட்ட இரு முகாம்களை மீண்டும் திறக்க நடவடிக்கை

அம்பாறை, செப். 20

அம்பாறை மாவட்ட எல்லைக் கிராமங்களில் வாழும் மக்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் வங்களாவடி, சுகந்தபுர ஆகிய இடங்களில் இரு முகாம்கள் அமைக்கப்படவிருக்கின்றன.

ஏற்கனவே அந்தப் பகுதிகளில் இருந்த முகாம்கள் மூடப்பட்டுப் படையினர் வன்னி நடவடிக்கைக்காக அனுப்பப்பட்டிருந்தனர்.

அந்தக் கிராம மக்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதை அடுத்து முகாம்களை மீண்டும் திறக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

(10 ஆம் பக்கம் பார்க்க)



தேர்தல் நெருங்க, நெருங்க இப்படி பல ஸ்ரண்ட்டுகள் வெளிவரப்போகுது பாருங்கோ.........!

## மின்மாற்றி மீது கிரனேட் தாக்குதல்

வவுனியா, செப். 20

வவுனியா மாவட்டத்தில் குருமண்காட்டில் அமைந்துள்ள மின்மாற்றி ஒன்றின் மீது நேற்றுக்காலை கிரனேட் தாக்குதல் இடம்பெற்றது.

இந்தத் தாக்குதலால் மின்மாற்றியில் இருந்து ஒயில் வெளியேறிவிட்டதாகவும்—

அதைத் திருத்த இலங்கை மின்சார சபை அதிகாரிகள் முயற்சி மேற்கொண்டனர் என்றும்

அந்தப் பணியை மேற்கொள்ளப் படையினர் அனுமதி வழங்கவில்லை என்றும்— தெரிவிக்கப்பட்டது.

(இ-3-164-க)

## 48 பேரின் சடலங்கள் ஒரே குழியில் அடக்கம்!

### இறுதிச் சடங்கில் ஆயிரக்கணக்கானோர்

அம்பாறை, செப். 20

அம்பாறை மாவட்டத்தின் எல்லைக் கிராமமான புஞ்சிகிரியவில் நேற்று முன்தினம் ஆயுதபாணிகளின் தாக்குதலில் கொல்லப்பட்டவர்களில் 48 பேரின் சடலங்களும் ஒரே குழியில் போடப்பட்டு இறுதிக் கிரியைகள் நேற்று நடைபெற்றன.

பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் இடம் பெற்ற இந்த இறுதிக் கிரியைகளில் 10 ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் பங்குபற்றினர்.

இறுதிக் கிரியைகளில் பங்குபற்றுவதற்காக அமைச்சர்களான எம். எச். எம். அஷ்ரப், சுனோடா ஜெயசேன, பிரதி அமைச்சர் எச். எம். வீரசிங்க ஆகியோரும் ஐ. தே. க. நாடாளுமன்ற உறுப்பினர்களும் அங்கு வந்திருந்தனர்.

இறுதிக் கிரியைகளை ஒட்டி அம்பாறை நகரில் கூடும் ஞாயிறு சந்தை நேற்றுக் கூடவில்லை.

கடைகள் யாவும் பூட்டப்பட்டுக் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன.

(10 ஆம் பக்கம் பார்க்க)

### நோர்வேயில்

## மாநகர உறுப்பினராக ஈழத் தமிழர் தெரிவு!

ஒஸ்லோ, செப். 20

நோர்வேயில் பஹாடோ மாநகரசபைத் தேர்தலில் இரு ஈழத் தமிழர்கள் வெற்றி பெற்றுசபையின் உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 16 ஆம் திகதி அந்த மாநகர சபைக்கு நடந்த தேர்தலில் இடதுசாரி சோஷலிஸக் கட்சியின் வேட்பாளர்களாக நான்கு தமிழர்கள் போட்டியிட்டனர்.

இவர்களில் குபேரன் என்பவரும், சிவயோகம் சிவநேசன் என்ற பெண்மணியும் உறுப்பினர்களாகத்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பயணிகள் வசதி கருதி விசேட ஏற்பாடுகள்

யாழ்ப்பாணம், செப். 20

குடாநாட்டில் இருந்து விமானம் மூலம் வெளியிடங்களுக்குச் செல்லும் பயணிகளின் வசதிகருதி விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று யாழ். சிவில்நிர்வாக அலுவலக அதிகாரி எவ். ஹமீம் தெரிவித்தார்.

பயண ரிக்கெட் பெற்றவர்களில் முதலாவது சேவைக்குரியவர்கள் காலை 9.15 மணிக்கும்—

இரண்டாவதுசேவைக்குரியவர்கள் காலை 11.30 மணிக்கும்—

மூன்றாவது சேவைக்குரியவர்கள் பிற்பகல் 12.30 மணிக்கும்–பலாலிக்கு அழைத்துச் செல்லப்படுவர் என்றும்—

அதற்கேற்றவாறு பயணிகள் சமுகமளிக்க வேண்டும் என்றும் — அவர் கேட்டுள்ளார்.

முதலாவது சேவைக்குரிய

(10 ஆம் பக்கம் பார்க்க)

### நவம்பரில் இருந்து

## அடுத்ததேர்தல்வரை நாடாளுமன்றை பகிஷ்கரிப்பதற்கு ஐ. தே. கட்சி முடிவு

கொழும்பு, செப். 20

நவம்பர் முதலாம் திகதி வரவு செலவுத்திட்ட அறிக்கை முன் வைக்கப்பட்டதில் இருந்து அடுத்த தேர்தல் வரை நாடாளுமன்றத்தைப் பகிஷ்கரிக்கப் போவதாக ஐ. தே. க. அறிவித்துள்ளது.

அந்தக் காலத்தில் அரசுக்கு எதிராகப் பரவலாகப் போராட்டங்களை நடத்தப் போவதாகவும் ஐ. தே. க. தெரிவித்துள்ளது.

அரசுக்கு எதிரான லஞ்சக் குற்றச் சாட்டுக்கள், மனித உரிமை மீறல்கள், வெகுஜன ஊடகங்களுக்கு எதிராகக் கட்டவிழ்க்கப்படும் அரச அழுத்தங்கள் போன்றவற்றை கருப் பொருளாகக் கொண்டு நாடு தழுவிய ரீதியில் இந்தப் போராட்டத்தை முன்னெடுப்பது என்றும் —

(10 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## மூடப்பட்ட...

(முதலாம் பக்கத் தொடர்)

முகாம்களை அமைக்க 200 படையினர் அங்கு அனுப்பப் படவிருக்கின்றனர்.

அத்துடன் 300 ஊர்காவலர்களும் சேர்க்கப்படவுள்ளனர்.

எல்லைக் கிராமங்களில் வாழும் மக்களின் கோரிக்கையை அடுத்து உயர்மட்டம் இந்த முடிவை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-3-14)

## 48 பேரின்...

(முதலாம் பக்கத் தொடர்)

தமிழரும் முஸ்லிம்களும் அச்சம் காரணமாக நேற்று நகருக்கு வரவில்லை.

சன நடமாட்டம் இன்றி நகர் வெறிச்சோடிக் காணப்பட்டது.

அதே நேரம் — தமிழ்க் கிராமங்களில் விசேட அதிரடிப் படையினர் தேடுதல்களை நேற்று மேற்கொண்டனர். (இ-3-7-14)


யாழ். மாவட்ட
பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள்
காலவரையறையற்ற வேலைநிறுத்தம்

இளம் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவேண்டும் என்றும், அரசாங்க சேவையில் உள்வாங்கும் வயதெல்லைக்கு மேற்பட்ட ஆசிரியர்களை வேதனத்துக்குரிய இரண்டு மணித்தியாலங்களுடன் பாடசாலையை விட்டு விடுவிக்கப்படவேண்டும் என்ற கோரிக்கைக்கும் பதில் ஏதும் கிடைக்காமையால் காலவரையறையற்ற வேலை நிறுத்தத்தில் இன்று 20-09-1999 திங்கட்கிழமை தொடக்கம் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் ஈடுபடவுள்ளோம்.

பகுதிநேர ஆங்கில ஆசிரியர் சங்கம்,
யாழ். மாவட்டம்.

[69183]



இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனம்
மகாமேறா சிமெந்து
MAHAMERA CEMENT

இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனத்தினையும் பங்குதார்ராகக் கொண்ட மகாவலி மரைன் சிமெந்து கொம்பனி லிமிட்டெட் (MAHAWELI MARINE CEMENT CO. LTD) நிறுவனத்தினால் உற்பத்தி செய்யப்படும் ''மகாமேறா'' [MAHAMERA] சிமெந்தினை வடபகுதி மக்களுக்கு அறிமுகம் செய்து வைப்பதில் பெருமை அடைகின்றோம்.

எமது காங்கேசன் சிமெந்துக் கூட்டுத்தாபன உற்பத்தியின் தரத்திற்கு நிகரான மேற்படி சிமெந்தினைப் பெறுவதற்கு யாழ். கன்னாதிட்டி வீதியில் அமைந்துள்ள எமது காரியாலயத்தில் தொடர்பு கொள்ளலாம்.

சிமெந்து பைக்கற் ஒன்றின் சில்லறை விலை ரூபா 515/--
மொத்தமாகப் பெற்றுக் கொள்பவர்களுக்கு
விசேட கழிவுகள் வழங்கப்படும்.

பொறுப்பதிகாரி
யாழ், காரியாலயம்,
இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனம்.
65, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம். [சி/8999]



உ
சிவமயம்

புதுக்கடைத் திறப்புவிழாவும்
இடம் மாற்றமும்

கடந்த சில காலமாக (புதிய இல. 352) நாவலர் வீதியில் இயங்கி வந்த எமது ஸ்தாபனத்தை வாடிக்கையாளர்களின் நன்மை கருதி 20-09-1999 இன்று முதல்

த. குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ்

52, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம் எனும் புதிய இடத்தில் ஆரம்பிக்க உள்ளோம்.
வாடிக்கையாளர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள் அனைவரையும்
திறப்பு விழாவில் கலந்து கொண்டு சிறப்பிக்கும் வண்ணம்
மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

இங்ஙனம்
த. குமாரசாமி
உரிமையாளர்

52, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம். [சி/9005]


## இளைஞனைக் காணவில்லை

கல்வியங்காடு பகுதியைச் சேர்ந்த இளைஞன் ஒருவர் கடந்த 17 ஆம் திகதி தொடக்கம் காணாமற் போய்விட்டார் என்று உறவினர்களினால் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். கிளையில் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

விநாயகர் வீதி, கல்வியங்காட்டைச் சேர்ந்த மகாதேவன் மதிவதனன் (வயது 24) என்பவரே காணாமல் போனவராவார்.

இவர் சம்பவதினம் கொக்குவிலுக்குச் சென்று வருவதாகக்கூறி வீட்டிலிருந்து புறப்பட்டுச் சென்றார் எனவும் இதுவரை வீடு திரும்பவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்த இளைஞன் ஏற்கனவே கடந்த மார்ச் மாதம் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு ஒருவார காலமாகத் தடுத்து வைக்கப்பட்டு விசாரணையின் பின் விடுவிக்கப்பட்டதாகவும் அந்த முறைப்பாட்டில் தெரிவிக்க படுகின்றது. (இ-9)

## இரு தரப்புக்கும்...

(முதலாம் பக்கத் தொடர்)

டும்.

மேற்கண்டவாறு செஞ்சிலுவைச் சர்வதேசகுழ கொழும்பில் செய்தியாளர்களுக்கு விடுத்த செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவித்துள்ளது.

அதே சமயம் அரச படையினருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெறும் மோதல்களில் அப்பாவிப் பொதுமக்களே கொல்லப்படுகின்றனர் எனவும் இதனால் நாட்டின் நிலைமை வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது எனவும் மேற்குலக நாடுகளின் இராஜதந்திரிகள் கொழும்பில் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஆறுமாதங்களில் வன்முறைச் சம்பவங்கள் வெகுவாக அதிகரித்துள்ளன எனவும்—

இதனால் நாளொன்றுக்கு சுமார் 15 பேர் வரையில் கொல்லப்படுகின்றனர்எனவும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (இ-7)


எமது புதிய
CD வெளியீடு!

அருண்பாண்டியனின்
புலனாய்வுத் துறை

அருண்பாண்டியன்
மாலாஸ்ரீ நடித்த
லேடி டைகர்

வீடியோ விமல்
யாழ்ப்பாணம்.
(சி/9011)


## பாதுகாப்புக்குச் சென்ற 21 பெண் சிப்பாய்கள் விபத்தில் காயம்

அம்பாறை, செப். 20

அம்பாறையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சம்பவத்தில் கொல்லப்பட்டவர்களின் இறுதிக் கிரியைகளுக்குப் பாதுகாப்பு வழங்க பெண் சிப்பாய்கள் சென்ற வாகனம் விபத்துக்குள்ளானதில் 21 பெண் சிப்பாய்கள் காயமடைந்தனர்.

கொண்டை வெட்டுவான் முகாமில் இருந்து இவர்கள் சென்ற வாகனம் மங்களகம என்னும் இடத்தில் விபத்துக்குள்ளானதாகவும் —

அதில் காயமடைந்த பெண் சிப்பாய்கள் அம்பாறை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டனர் என்றும்— தெரிவிக்கப்பட்டது. (இ-21-3-14)

## போராட்டம் நடத்தும் கைதிகளில் சிலரின்விவரம்

கொழும்பு, செப். 20

களுத்துறைச் சிறைச்சாலையில் உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ள சிலரின் விவரம் வருமாறு:

★ கிட்ணன் முருகானந்தன் — தம்பிலுவில்.
★ நல்லையா ராஜலிங்கம் — மட்டக்களப்பு.
★ வல்லிபுரம் மனோகரன் — வல்வெட்டித்துறை.
★ கிட்ணன் நந்தன்
★ சித்திரவேலாயுதர் கிருஷ்ணகுமார்.
★ இளையராஜா சுஜீபவன்
★ வீராசாமி லோகநாதன்
★ வன்னியசிங்கம் அகிலராஜன்.
★ ரத்தினம் விக்கினேஸ்வரன்
★ சண்முகநாதன் கமலேஸ்வரன்
★ எம்.கே. திருஞானமூர்த்தி
★ ரி. மேகநாதன்
★ காளிமுத்துசெல்வராஜா
★ பி. செல்வராஜா
★ தம்பையா ரவிச்சந்திரன்
★ கே, செல்வரஞ்சன்

## களுத்துறையில்...

(முதலாம்பக்கத் தொடர்)

கிட்ணர் முருகானந்தன் (தம்பிலுவில்), நல்லையா ராஜலிங்கம் (மட்டக்களப்பு), வல்லிபுரம் மனோகரன் (வல்வெட்டித்துறை) ஆகிய மூன்று கைதிகளும் கடந்த செவ்வாய்க்கிழமைமுதல் உண்ணாவிரதம் இருந்து வருகின்றனர்.

இவர்கள் மூவரின் நிலை மோசமாகி வருவதாக அங்கு விஜயம் செய்து திரும்பிய சட்டத்தரணிகள் தெரிவித்தனர்.

தாம் சாகும்வரையான போராட்டத்தை ஆரம்பித்திருப்பதாகவும்—

தம்மை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்ல முயலவேண்டாம் என்றும்—அங்கு விஜயம் செய்த மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிரதிநிதிகளிடம் அவர்கள் தெரிவித்தனர்.

மனித உரிமைகள் ஆணைக்குழு உறுப்பினர் ரி. சுந்தரலிங்கம், இணைப்பாளர்களான எஸ். சிறீதரன், பிரசன்ன அரசப்பத் ஆகியோர் சகிதம் நேற்று முன்தினம் அங்கு சென்று கைதிகளுடன் கலந்துரையாடினார்.

''நாம் அளித்த ஒப்புதல் வாக்கு மூலத்தை வைத்துக் கொண்டு எம் மீது பல குற்றச்சாட்டுகளை நீதிமன்றத்தில் பொலீஸார் தாக்கல் செய்கின்றனர் என்று கைதிகள் அவர்களிடம் தெரிவித்தனர்.

உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்த மூவரும் மயக்கநிலையில் உள்ளனர் என்றும் —

அவர்களுக்கு ஆதரவாக இந்தப் போராட்டத்தில் இணைந்துள்ள 15 பேரில் 7 பேர் கதைக்கமுடியாத நிலையில் இருந்தனர் என்றும் — மனித உரிமைக் குழு அதிகாரிகள் தகவல் வெளியிட்டனர்.

இந்தக் கைதிகளின் விடுதலை தொடர்பாக நீதி அமைச்சு மற்றும் சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரிகளுடன் பேச இருப்பதாகவும் அவர்கள் கூறினர்.

இதற்கிடையில் — இந்தப் போராட்டத்தில் மேலும் 100 பேர் இணைந்துள்ளனர் என்று சட்டத்தரணி அப்பாப்பிள்ளை விநாயகமூர்த்தி நேற்றுத் தெரிவித்தார்.

தமது போராட்டம் தொடர்பாக கைதிகள் நேற்றுச் செய்தி ஊடகங்களுக்கு கடிதம் அனுப்பி இருந்தனர்.

''தமது போராட்டத்துக்கு நீதியான தீர்வு கிடைக்கும் வரை சாகும்வரை தொடரும்'' என்று அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மாநகர...

(முதலாம் பக்கத் தொடர்)

தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

நோர்வேயில் ஈழத் தமிழர் மாநகரசபையில் அங்கத்தவர்களாகியுள்ளமை இதுவே முதல் தடவை ஆகும்.

25 பிரதிநிதிகளைக் கொண்ட இந்த மாநகரசபையில் 10 ஆசனங்களைப் பெற்றுள்ள தொழிற் கட்சி ஆட்சி அமைக்க இரு ஈழத் தமிழர் அங்கம் வகிக்கும் இடதுசாரி சோஷலிஸ கட்சியின் உதவியை நாடியுள்ளதாகவும்—

தமது கட்சி தொழில் கட்சிக்கு ஆதரவு வழங்கி ஆட்சி அமைக்க முடிவு செய்துள்ளது என்றும் — உறுப்பினராகத் தெரிவாகியுள்ள குபேரன் தெரிவித்துள்ளார்.

தமக்குக் கிடைத்துள்ள பதவி மூலம் ஈழத்தமிழரின் போராட்டத்துக்கு ஆதரவு திரட்டப்போவதாகவும் அவர் கூறினார்.

## அடுத்த...

(முதலாம் பக்கத் தொடர்)

இந்த விடயங்களை சர்வதேச ரீதியில் பிரசாரப்படுத்துவது என்றும் — ஐ. தே. க முடிவுசெய்துள்ளது

## பயணிகள்...

(முதலாம் பக்கத் தொடர்)

வர்களை காலை 8.15 மணிக்கும் இரண்டாவது சேவைக்குரியவர்களை காலை 10.30 மணிக்கும் மூன்றாவது சேவைக்குரியவர்களை 11.30மணிக்கும்சமுகமளிக்குமாறும் அவர் கேட்டுக் கொண்டார்.

அவசர தேவைகளுக்குச் செல்பவர்கள் காலை 9.00 மணிக்கு சிவில் நிர்வாக அலுவலகத்தில் பயண ஏற்பாடுகளுடன் சமுகம் தரவேண்டும் என்றும்—

ஏற்படும் வெற்றிடங்களை பொறுத்து அவர்களுக்கு இடம் வழங்கப்படும் என்றும்—அவர் சொன்னார்.

விமானத்தில் பயணத்தை மேற்கொள்ளவிருக்கும் பொதுமக்கள் தங்கள் பயண அனுமதியை பரிசீலனை செய்து பயண ரிக்கெட் பெறுவதற்கான திகதியையும் ஒரு நாளிலும்—

பயண அனுமதிப்படிவம், ரிக்கெட் ஆகியவற்றை மற்றொரு நாளிலும்—பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும் அவர் கூறினார்.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 20-09-1999 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்று அன்னதானம்

வண்ணை ஸ்ரீ வேங்கடேசப் பெருமாள் கோயில் இரதோற்சவத்தை முன்னிட்டு இன்று (20-09-99) அன்னதானம் வழங்கப்படும் என்பதை அடியார்களுக்கு அறியத்தருகின்றோம்.

பெருமாள் இளைஞர் நற்பணி மன்றம்

(69221)

# மரண அறிவித்தல்கள்

## கணபதிப்பிள்ளை சிவாகரன்

(தரம் 11A மாணவன், சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

கணபதிப்பிள்ளை—சந்திரமௌலீஸ்வரதேவி தம்பதிகளின் அன்புப்புதல்வன் சிவாகரன் 18-09-99 சனிக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் கவிதாகரன் (பொறியியல் பீடம்—மொறட்டுவ), சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவர்களான சசிகரன் (தரம் 12 கலை), சுவேதா (தரம் 10), உமாகரன் (தரம் 7), பிரியங்கா (ஸ்ரீசண்முகானந்தா வித். கல்வயல்) ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20-09-99) திங்கட்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சி. கணபதிப்பிள்ளை
(தந்தை)

கல்வயல்,
சாவகச்சேரி.

(69217)

## முத்துக்குமாரு நாகராசா

வடக்கம்பரை, தொல்புரத்தைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட முத்துக்குமாரு நாகராசா சென்னையில் காலமானார்.

அன்னார் கமலாம்பிகையின் அன்புக் கணவரும் ஜேர்மனியில் வசிக்கும் மோகன், றஜி, விஜி, ஜீவா, மாலன் மற்றும் கலா, மோகனகரன் (பேபி), ஜமுனா, வளர்மதி (மதி – இந்தியா), காலஞ்சென்ற ஜெகன் மோகன் (பவி), மோகனரூபன் (சைமன்) ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20-09-99) திங்கட்கிழமை சென்னையில் நடைபெறும்.

தகவல்:
நா, எழில்மோகன்,
கலா,
(கொக்குவில்)

கலா ஸ்ரோர்ஸ்,
31, திருநெல்வேலி.

(69219)

## திருமதி கந்தவனம் தங்கச்சி அம்மா

கொக்குவில் நந்தாவிலைப் பிறப்பிடமாகவும் மலேசியா கோலாலம்பூரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தவனம் தங்கச்சி அம்மா அவர்கள் 18-09-99 அன்று கோலாலம்பூரில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தவனத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சிவபாலசுந்தரம், ரதி, மணி, ராஜ்குமார், மலர், காந்தி ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற ஆறுமுகம்பெனடிக் (மலாக்கா), காலஞ்சென்ற திருமதி அம்மாகுட்டி (மலாக்கா,) காலஞ்சென்ற நடராஜா (கொக்குவில்), திருமதி சிவபாக்கியம் (கொக்குவில்) ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் (19-09-99) ஞாயிற்றுக்கிழமை கோலாலம்பூரில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
திரு, நடராஜா சற்குருநாதன்

நீர்கொழும்பு.

(69218)

## அம்பலவாணர் சுப்பிரமணியம்

(பிரபல வர்த்தகர் – பதுளை)

காரைநகர் பயிரிக்கூடலைச் சேர்ந்த அம்பலவாணர் சுப்பிரமணியம் நேற்று 19—09—99 ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவரான அம்பலவாணர் சின்னப்பிள்ளையின் அன்பு மகனும் காலஞ்சென்ற கோவிந்தர் தெய்வானைப்பிள்ளையின் அன்பு மருமகனும் கனகம்மாவின் அன்புக் கணவரும், மகேஸ்வரி (ஜேர்மனி), ராஜேஸ்வரி (பதுளை), பத்மாவதி (கொழும்பு), நாகேஸ்வரி (வவுனியா), சிவஞானம், ஞானசோதி, தவராசா (பதுளை), கருணாகரன் (லண்டன்), அருணகிரிநாதன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் செல்வரத்தினம் (ஜேர்மனி), கந்தசாமி (பதுளை), தியாகலிங்கம் (சிவா இன்டபிறைஸ், நுவரெலியா), நித்தியானந்தம் (நொச்சிகாமம்), தவமணி, பத்மா, நிர்மலா, சாந்தினி (லண்டன்), விஜயரூபி ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20-09-99) திங்கட்கிழமை கொழும்பு ஜெபவர்த்தன மண்டபத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பி ப. 3.00 மணிக்கு கனத்தை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
திருமதி நிர்மலா தவராசா
(மருமகள்)

பயிரிக்கூடல்,
காரைநகர்.

(69222)

## பதுளையில் மூவர் கைது

கொழும்பு, செப். 20

பதுளை காலியெல றொக்கத்தன்ன தோட்டத்தைச் சேர்ந்த சகோதரர்கள் மூவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

பெருமாள் ராஜ்குமார், பெருமாள் கணேசன், பெருமாள் ராமசாமி ஆகியோரே கைது செய்யப்பட்டவர்களாவர்.

கடந்த 5 வருட காலமாக இப்பகுதியில் வசித்து வந்த இவர்கள் மட்டக்களப்பு ஏறாவூரைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ)

## பற்சிகிச்சை நிலைய திறப்பு விழா

தென்மராட்சி, செப், 20

பளை வைத்தியசாலையில் சுகாதாரத் திணைக்களத்தினால் நிர்மாணிக்கப்பட்ட பற்சிகிச்சை மண்டபக் கட்டடம் மற்றும் சிறுவர் வார்ட் கட்டடம் ஆகியவற்றின் திறப்பு விழா இன்று திங்கட்கிழமை காலை 10. 30 மணிக்கு வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி டாக்டர் ச. அம்பிகைபாலன் தலைமையில் நடைபெறும்.

யாழ்ப்பாணம் சுகாதார சேவைகள் மாகாணப் பிரதிப் பணிப்பாளர் டாக்டர் க. தா. சிவபாதம், பளை பிரதேச செயலர்சு. புத்திசிகாமணிஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொள்வர்.

(ஐ-117)


ஞானோதயா
சாவகச்சேரி.
எழுதுவினைஞர் போட்டிப் பரீட்சை வகுப்பு
ஆரம்பம்: 21-09-1999
1-00 மணி
ஆசிரியர்: தவசேகர்
(சி/9010)

லிபேட்டி தியேட்டர்
அச்சுவேலி.
விஜய் - சிம்ரான் நடித்த
துள்ளாத மனமும் துள்ளும்
காட்சிகள்: 10-30, 2-30
(69025)

நாகம்ஸ்
கன்னாகம்
அர்ஜுன் - ரம்பா - மீனா வடிவேலு நடித்த
செங்கோட்டை
காட்சிகள் 11.00, 2.30
[புதிய நேரம்]
(69189)

ராஜா
யாழ்ப்பாணம்
கடைசி வாரமாக
மம்முட்டி - தேவயானி மற்றும் பலர் நடித்த
மறுமலர்ச்சி
10-30, 2-30
22 ஆம் திகதி முதல்
பாண்டியன்
(இ/8968)


# கொழும்பில் இருந்து கப்பலில் தார் பரல்கள்

யாழ்ப்பாணம், செப். 20

கொழும்பில் இருந்து 300 தார் பரல்கள் யாழ். மாநகர சபைக்கு கப்பல்மூலம் எடுத்து வரப்பட உள்ளதாக யாழ். மாநகரசபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தற்சமயம் கையிருப்பில் உள்ளதார் முடிவடைந்துள்ளதால் சேதமடைந்துள்ள வீதிகளை உடனடியாகத் திருத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும்—

தார் எடுத்து வரப்பட்டதும் ஏற்கனவே திருத்துவதற்காகத் திட்டமிடப்பட்டிருந்த வீதிகள் உடன் திருத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-9)

## புறொயிலர் கோழிக் குஞ்சு விநியோகம்

கோழிப் பண்ணையாளர்களின் பயனை ஊக்குவிக்கும் பொருட்டு வலி.கிழக்கு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தினரால் குறைந்த விலையில் புறொயிலர் ஒரு நாள் குஞ்சுகள் வழங்கப்படவுள்ளன.

இப்பகுதி பண்ணையாளர்களின் சுயதொழிலை ஊக்குவிக்கும் முகமாக மாதாந்தம் ஒரு நாள் குஞ்சுகள் குறைந்த விலைகளில் வழங்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் எதிர்வரும் 28 ஆம் திகதி 750 புறொயிலர் ஒரு நாள் குஞ்சுகள் 35 ரூபாப்படி வழங்கப்படவுள்ளதாக சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. [ஐ-180]

## சாரணர் வாரம்

சண்டிலிப்பாய், செப் 20

அகில இலங்கை ரீதியில் சாரணர் வாரம் நாளை செவ்வாய்க்கிழமை முதல் 26 ஆம் திகதி ஞாயிறு வரை அனுஷ்டிக்கப்படுவதை முன்னிட்டு காங்கேசன்துறை மாவட்ட சாரணர் கிளைச் சங்கம் மாவட்ட மட்டத்திலும் பாடசாலைகள் மட்டத்திலும் பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தவுள்ளது.

சங்கத்தின் செயற்பாடுகளை பற்றி மக்களுக்குவிளக்கமளித்தல் என்ற தலையங்கத்தின் கீழ் பிரச்சார நடவடிக்கையை மேற்கொள்ளுதல், இப் பிரிவிலுள்ள சேதமடைந்த பஸ் தரிப்பு நிலையங்களை பொதுமக்களின் உதவியோடு புனரமைப்புச் செய்தல், சிரமதானங்களை மேற்கொள்ளுதல், விளையாட்டுகள், கலைநிகழ்ச்சிகள் ஆகியவற்றை நடத்துதல் ஆகிய செயற்றிட்டங்கள் இச் சாரணர் வாரத்தில் இங்கு மேற்கொள்ளப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-135)

## நேர்முகப் பரீட்சை

பளை பிரதேச செயலகத்தில் சமுர்த்தி திட்டத்தை செயற்படுத்தும் பொருட்டு சமுர்த்தி முகாமையாளர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

சமுர்த்தி முகாமையாளர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை இன்று திங்கட்கிழமை காலை 10. 00 மணிக்கு பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது.

சமுர்த்தி ஊக்குவிப்பாளர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை கடந்தவருடம் நடத்தப்பட்ட போதிலும் இதுவரை தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு நியமனம் வழங்கப்படவில்லை.

(ஐ-117)

## கிணற்றில் சிசுவின் சடலம்

கிணறொன்றில் இருந்து மீட்கப்பட்டதாக தெரிவித்து ஒரு நாள் ஆண் சிசுவின் சடலம் ஒன்று கடந்த வெள்ளிக்கிழமை யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

புத்தூர் வாதரவத்தைப் பகுதியில் உள்ள கிணறொன்றில் மிதந்து கொண்டிருந்ததாகவும், அதனைக் கண்டவர்கள் அப்பகுதி கிராம அலுவலரிடம் தெரிவித்ததை அடுத்து அந்த இடத்துக்குச் சென்ற கிராம அலுவலர் பொதுமக்களின் உதவியுடன் சிசுவின் சடலத்தை மீட்டு எடுத்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

சிசுவின் சடலம் மரண விசாரணையின் பொருட்டு ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டது.

பொலீஸார் இது பற்றிய புலன் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர் என்று தெரிய வருகின்றது. (இ-15)

# மரண அறிவித்தல்

## கிருஸ்ணர் கதிரவேலு

சுழிபுரம் தெற்கு சுழிபுரத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட கிருஸ்ணர் கதிரவேலுஅவர்கள் 19-9-99இல் இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லம்மாவின் அன்புக் கணவரும் சண்முகம், காலஞ்சென்ற பாக்கியம், சரஸ்வதி, பூபதி ஆகியோரின் அன்புச் சகோதரரும் சிவஞானம், நித்திஞானம் (சுழிபுரம்), தங்கவடிவேல் (இன்பம்– இந்தியா), பரமானந்தம் (சுவிஸ்), திருஞானம் (வேவி– ஜேர்மனி), சிவசுந்தரம் (சுவிஸ்), அனுசம்மா (சித்தன்கேணி), லட்சுமி (ராசாத்தி–சுழிபுரம்), புஸ்பராணி (சுழிபுரம்), புஸ்பமாலா (சுவிஸ்) ஆகியோரின் தந்தையாரும், காலஞ்சென்ற சின்னராசா (பழனி-சித்தன்கேணி), சுப்பிரமணியம் (அப்பு அண்ணை– இ.போ.ச.சுழிபுரம்), பாலசுப்பிரமணியம் (சுழிபுரம்), ஸ்ரீமுருகவேள் (பாஸ்கரன்–சுவிஸ்), சுலோசனாதேவி (தேவி), இராசேஸ்வரி, வசந்தாதேவி (இந்தியா), உதயராணி (சுவிஸ்), பவானி (ஜேர்மனி), யோகேந்தினி (சுவிஸ்) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20-9-99) திங்கட்கிழமை காலை 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுபூதவுடல் தகனக்கிரியைகளுக்காக திருவடிநிலை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

தகவல்:
சிவஞானம், நித்திஞானம்,
(மகன்மார்)

சுழிபுரம் தெற்கு,
சுழிபுரம்.

(69220)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைதிப்படைத் தளபதி கிழக்குத் திமோர் வருகை

டிலி, செப்ரெம்பர், 20

**கிழக்குத் திமோரில் அமைதிகாக்கும் பணியில் ஈடுபடவுள்ள ஐ. நா. சமாதானப் படைக்குத் தலைமை வகிக்கும் ஆஸ்திரேலிய படைத் தளபதி மேஜர் ஜெனரல் பீற்றர் கொஸ்பரோ நேற்று கிழக்குத் திமோருக்கு போய்ச் சேர்ந்துள்ளார்.**

அவருடன் 13 அதிகாரிகள் அடங்கிய குழுவினரும் உடன் சென்றுள்ளனர்.

ஐ.நா. படைகள் அமைதிப் பணியை ஆரம்பிப்பது தொடர்பாக ஆஸ்திரேலியத் தளபதியும், இந்தோனேசியப் படைத்தளபதிகளும் சந்தித்து பேச்சு நடத்தினர்.

தலைநகர் டிலியில் பலத்த பாதுகாப்பு ஏற்பாட்டுக்கு மத்தியில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

முன்னதாக ஆஸி தளபதியும் அவரது குழுவினரும் ஆயிரத்துக்கு மேற்பட்ட அகதிகள் தங்கியுள்ள ஐ நா. முகாம் ஒன்றுக்கும் மற்றும் சில இடங்களுக்கும் விஜயம் செய்தனர்.

இன்னும் சில வாரகாலத்துக்குள் எண்ணாயிரம் படைகள் அடங்கிய ஐ நா படையினர் திமோருக்குப் போய்ச் சேரவுள்ளனர். அதேவேளை சுமார் 3 ஆயிரம் இந்தோனேசியத் துருப்புக்கள் இன்னும் ஒருவார காலத்துக்குள் கிழக்குத் திமோரில் இருந்து வெளியேற உள்ளன.

[ஐ[

## மூவர் மட்டும் வாக்களிக்க இந்தியாவில் வாக்குச் சாவடி

இந்தியாவின் அருணாச்சல் பிரதேசத்தில் மூன்று வாக்காளர்களுக்காகத் தனி வாக்களிப்பு நிலையம் ஒன்று அமைக்கப்படவுள்ளது

கடல் மட்டத்திலிருந்து 8 ஆயிரத்து 500 மீற்றர் உயரத்தில் உள்ள ஒரு மலைக் கிராமத்திலேயே இந்த வாக்களிப்பு நிலையம் அமைக்கப்படவுள்ளது

இங்கு இரண்டு குடிசைகளில் மொத்தம் மூவர் மட்டுமே வசித்து வருகின்றனர். கடந்த முறை நடைபெற்ற தேர்தலின்போது வாக்களிக்கும் நிலையம் இங்கு அமைக்கப்படாததால் இவர்கள் வாக்களிக்கவில்லை இதனை அடுத்தே இம்முறை இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது

அருணாச்சல் பிரதேசத்தில் ஆயிரத்து எழுநூற்று நாற்பது வாக்களிப்பு நிலையங்கள் உள்ளன. இவற்றில் சுமார் 100 வாக்களிப்பு நிலையங்களில் 12 முதல் 80 வாக்காளர்களே பதிவு செய்யப்பட்டுள்ளனர். [ஐ–க]

# அமெரிக்கா, இந்தியாவுக்கு எதிராகப் புனிதப் போர்!

## ஒஸாமா பின்லேடன் அறிவிப்பு

காபூல் செப். 20

அமெரிக்கா மற்றும் இந்தியாவிற்கு எதிராக புனிதப் போர் நடத்தப் போவதாக சவுதிக்கோடீஸ்வரனும் அமெரிக்காவினால் தேடப்பட்டு வருபவருமான பின்லேடன் அறிவித்துள்ளார்

இந்தப் புனிதப் போரில் அனைத்து பாகிஸ்தான் தீவிரவாதக் குழுக்களும் ஒன்றுபட்டு செயற்பட வேண்டும் எனவும் லேடன் கேட்டுள்ளார்.

ஆப்கானிஸ்தானின் ஜலந்தர் நகரில் இருந்து இந்தக் கோரிக்கையை அவர் விடுத்தார்.

இந்திய காஷ்மீர்ப் பகுதியில் போராடி வரும் முஜாகுதீன் கிளர்ச்சிக்காரர்களுக்கு ஆதரவாக செயற்படத் தான் தயாராக உள்ளதாகவும் லேடன் தெரிவித்துள்ளார்.

கென்யா மற்றும் தன்சானியாவில் உள்ள அமெரிக்கத் தூதரகங்கள் மீது நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதல்களின் சூத்திரதாரி எனத் தெரிவித்து அமெரிக்கா வலை வீசித் தேடி வரும் வேளையில் லேடன் இந்த அறிவித்தலை விடுத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ–க)

## ரஷ்ய போர் விமானங்கள் செச்னியா மீது தாக்குதல்

மொஸ்கோ, செப் 20

செச்னியாவில் உள்ள கிளர்ச்சிக்காரர்களின் நிலைகள் மீது நேற்று முன்தினம் இரவோடு இரவாக ரஷ்ய விமானங்கள் கடும் தாக்குதல் நடத்தியதாக அறிவிக்கப்படுகிறது.

ரஷ்யாவின் தெற்குக் குடியரசான டாகெஸ்தான் மீது கிளர்ச்சிக்காரர்கள் மீண்டும் தாக்குதல் தொடுக்க திட்டமிட்டுள்ளதைதடுக்கவே இந்த விமானத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதாக ரஷ்ய இராணுவத் தளபதி ஒருவர் தெரிவித்தார்.

செச்னியா மீதான தாக்குதலுக்கு ரஷ்ய நாடாளுமன்றம் அங்கீகாரம் அளித்திருந்தது.

(ஐ–க)

## இராணுவத் தளபதியை விசாரணை செய்க

### திமோர் ஆயர் கோரிக்கை

ஜகார்த்தா, செப். 20

இந்தோனேசிய இராணுவத் தளபதியை நீதி விசாரணைக்கு உட்படுத்த வேண்டும் என கிழக்குத் திமோர் கத்தோலிக்க ஆயர் கார்லோ பிலோ வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கிழக்குத் திமோரில் நடைபெறுகின்ற வன்முறைகள் மற்றும் படுகொலைகள் அனைத்தும் இந்தோனேசிய இராணுவத் தளபதி ஜெனரல் மிராண்டோவின் நேரடி உத்தரவின் படியே நடைபெற்று வருகின்றன எனவே மிராண்டோவை நீதி விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் என அவர் கேட்டுள்ளார். (ஐ-க)

# தீவகப் பிரதேசத்துக்கு சீராக மின் வழங்குமாறு கோரிக்கை

## வேலணை பி. சபைத் தலைவர் கடிதம்

வேலணை, செப. 20

வேலணை பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பிரதேசங்களுக்கு சீரான முறையில் மின்சாரம் வழங்கக் கோரியும் இருபத்திநான்கு மணிநேர மின்சாரம் கிடைப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் இலங்கை மின்சார சபையின் வடபிராந்திய பிரதிப் பொதுமுகாமையாளரிடம் வேலணை பிரதேச சபைத் தலைவர் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் தனது கோரிக்கையில் தெரிவித்திருப்பதாவது;

வேலணை பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் சீரற்ற மின் விநியோகத்தால் பாவனையாளர்கள் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர். பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பொது மக்கள் பெருமளவில் வசிக்கின்ற வேலணை. நயினாதீவு ஆகிய பிரதேசங்களில் சில பகுதிகளுக்கு வழங்கப்படும் மின்சாரம் கூட அடிக்கடி தடைப்படுவதும் சீரற்றதுமாக உள்ளது. அத்தோடு அப்பகுதிகளுக்கு மின்சாரத்தினை வழங்கும் மின்பிறப்பாக்கி பழுதடைந்தால் அதனைத் திருத்தி மீண்டும் மின்சாரத்தினை வழங்க பல நாள்கள் செல்கின்றது இதனால் பாவனையாளர்கள் விசனமடைகின்றனர்.

யாழ். மாவட்டத்தின் ஏனைய பிரதேசங்களுடன் ஒப்பிடுகையில் எமது பிரதேசம் மிகவும் பின் தங்கியுள்ளதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. அத்தோடு எமது பிரதேசத்தில் மக்கள் மீளக்குடியமரும் வீதமும் ஏனைய பிரதேசங்களுடன் ஒப்பிடுகையில் மிகவும் குறைவாகவே உள்ளது.

எமது பிரதேசத்தினைச் சேர்ந்த கணிசமான மக்கள் யாழ். மாவட்டத்தில் வசிக்கின்றார்கள். அவர்கள் அங்கு 24 மணி நேர மின்சாரத்தினை அனுபவிக்கின்றார்கள். மின்சாரம் மற்றும் பல வசதிகளுடன் வாழும் அவர்கள் எமது பிரதேசத்திற்கு மீளக்குடியமர வருவார்கள் என எதிர்பார்ப்பது இயலாத காரியம்.

மக்கள் மீளக்குடியமராததால் எமது பகுதிகளிலுள்ள வளங்கள் யாவும் சுரண்டப்பட்டு எமது பிரதேசம் மீண்டும் கட்டியெழுப்ப முடியாதளவுக்கு பின்தள்ளப்படும் என்பது வெட்டத் தெளிவாகும்.

எனவே எமது பிரதேசங்களுக்கு சீரான மின்விநியோகத்தினை ஏற்படுத்தித் தருமாறு கோருகிறோம் என்று அவர் அக்கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளார்.

[ஐ 167]

## வகுப்பறை திறப்பு விழா

காரைநகர், செப். 20

காரைநகர் கலாநிதி ஆ. தியாகராசா மத்திய மகா வித்தியாலய ஆரம்பப் பாடசாலையின் தரம் 1-க்கான வகுப்பறைத் திறப்பு விழா இன்று திங்கட்கிழமை காலை 9. 30 மணிக்கு கல்லூரி அதிபர் பண்டிதர் மு. சு. வேலாயுதபிள்ளை தலைமையில் நடைபெற உள்ளது.

இந் நிகழ்வில் ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் சி. செல்வரத்தினம் பிரதம விருந்தினராகவும் ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகர் ஆ. பலராமன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ-73)

## குருநகர் குடும்பங்களுக்குக் கொடுப்பனவு

குருநகர், செப். 20

குருநகர் றெக்கிளமேசன் கிழக்கு, றெக்கிளமேசன் மேற்கு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 593 குடும்பங்களுக்கு மீளக்குடியமர்வு கொடுப்பனவான 5 ஆயிரம் ரூபா கடந்த வியாழக்கிழமை தொடக்கம் வங்கிகள் மூலம் வழங்கப்பட்டு வருகிறது.

(ஐ-51)

## சமுர்த்தி செயலணிக் குழுக்கள்

வலி. தென்மேற்கு, செப். 20

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கடமையைப் பொறுப்பேற்றசமுர்த்தி அலுவலர்கள் 'சமுர்த்தி செயலணிக்குழுக்களை' அமைத்து வருகின்றனர்.

18வயதிற்கும் 35வயதிற்கும் இடைப்பட்ட5பேர் கொண்ட குழுவினை சமுர்த்தி அலுவலர் தெரிவு செய்து விவரங்களை பிரதேச செயலர் கா. சந்திரராசாவிடம் கையளிக்கவுள்ளனர்

இதற்கான ஏற்பாடுகளை சமுர்த்தி அலுவலர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

(ஐ-135)

# நள்ளிரவு வீடுபுகுந்து யுவதியை கடத்திய 6 இளைஞர் கைது

நெல்லியடி, செப் 20

நள்ளிரவுவேளை வீட்டினுள் புகுந்து அங்கு உறங்கிக்கொண்டிருந்த யுவதி ஒருவரைக் கடத்திச் சென்றதாகக் கூறப்படும் ஆறு இளைஞர்களை சுன்னாகம் பொலீஸார் கைது செய்தனர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட அவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த புதன்கிழமை இரவு வட்டுக்கோட்டையைச் சேர்ந்த 22 வயது யுவதி ஒருவரைக் கடத்திச் சென்றதாகச் சொல்லப்படும் இதே இடத்தைச் சேர்ந்தவர்களான சிவலிங்கம் – ஆனந்தன் (வயது 25), செல்லத்துரை – சிவலோகநாதன் (வயது 27) சுப்பிரமணியம்- ஸ்ரீதரன் (வயது 31) கந்தையா – ரவிக்குமார் (வயது 24) சங்கரப்பிள்ளை – மகேந்திரம் (வயது 22) நடராசா – மயூரன் (வயது 23) ஆகியோரை மறுநாள் வியாழக்கிழமை காலை சுன்னாகம் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி எஸ். ஐ. யூ. பி. தென்னக்கோன் தலைமையில் சென்ற பொலீஸார் கைது செய்தனர்.

மல்லாகம் நீதிவான்; பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் கடமை புரிவதனால் இவர்கள் ஆறுபேரும், கடந்த வெள்ளிக்கிழமை பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் நீதிவான் இ. த. விக்னராஜா முன்னிலையில், சுன்னாகம் பொலீஸாரினால் ஆஜர் செய்யப்பட்டனர் குறித்த சந்தேகநபர்களை இம்மாதம் 30 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட நீதிவான் கடத்திச் செல்லப்பட்டு மீட்கப்பட்ட யுவதியை யாழ் போதனா மருத்துவமனையில் சட்ட வைத்திய அதிகாரிக்குக் காண்பித்து, வைத்திய அறிக்கையை மல்லாகம் நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறு சுன்னாகம் பொலீஸாரைப் பணித்துள்ளார். (ஐ-109)

## அதிபர்களுடன் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், செப். 20

யாழ்ப்பாண கல்வி வலயத்தைச் சேர்ந்த பாடசாலை அதிபர்களுடன் வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் கலந்துரையாடவுள்ளார்.

இந்தக் கலந்துரையாடல் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2-30 மணிக்கு யாழ். கல்வி வலயப் பணிமனையில் நடைபெறவுள்ளது அதிபர்கள் அனைவரையும் சமுகம் தருமாறு யாழ் வலயக்கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (க)

## பொது சுகாதார பரிசோதகா நியமனம்

தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் பொதுச்சுகாதார பரிசோதகர்களாக ஐந்துபேர் கடந்த 15 ஆம் திகதி தொடக்கம் யாழ். சுகாதாரசேவை பிரதி மாகாணப் பணிப்பாளரினால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

உடுவில் பொது சுகாதார பரிசோதகர் க பி. சிவகுமாரும், சுன்னாகம் கிராமம் பொது சுகாதார பரிசோதகராக எஸ். செபராசாவும், சுன்னாகம் பட்டினம் பொது சுகாதார பரிசோதகராக கே. பத்மகுமாரும், ஏழாலை பொது சுகாதார பரிசோதகராக எஸ். பார்த்தீபனும், தெல்லிப்பழை பொது சுகாதார பரிசோதகராக ஆர். முருகானந்தனும் நியமிக்கப்பட்டுள்ளார்கள். (ஐ-135)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

கரம்பொன் மேற்கு ஊர் காவற்றுறையைச் சேர்ந்த திருநாவுக்கரசு பகீரதன் என்பவருடைய விசேட அடையாள அட்டை [இல. 091307502] தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் இல. 154/07 A, ஆத்திசூடி வீதி, கந்தர்மடம் யாழ்ப்பாணம் என்னும் முகவரியின் ஒப்படைத்து உதவவும். [69190]

துரைசிங்கம் பவானி என்பவரது விசேட, தேசிய அடையாள அட்டைகள் [0906018629- 776552879V] கே, கே. எஸ். வீதி, சுன்னாகம் ப.நோ. கூ. சங்கத்திற்கும் வருசப்புலம் சுன்னாகத்திற்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கரன் றேடர்ஸ். இல. 54, கே. கே. எஸ். வீதி, சுன்னாகம் என்ற விலாசத்தில் ஒப்படைத்து உதவவும். [[69209]

### இறைச்சிக்கோழி

புறொயிலர் இறைச்சிக் கோழி கிலோ 100/- க.குணசிங்கம் 160, A. V. வீதி, அரியாலை (தபாற்கட்டை சந்தி அருகில்.) (69195)

இறைச்சிக் கோழி புறோயிலர் மொத்தமாகவும் சில்லறையாகவும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: அண்ணா, புகையிரத வீதி, இணுவில் (69153)

### புறொயிலர் குஞ்சுகள்

புறொயிலர் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. விலை ரூபா 40 மட்டுமே! மல்லிகாபதி, மானிப்பாய். தொலைபேசி இல-2887. (69159)

### பயிறசி வகுப்பு

Fabric Printing பயிற்சி உங்களின் இடத்திலேயே தனியாகவோ குழுவாகவோ வழங்கப்படும். தொடர்பு: ஆசிரியர், 109/2, சட்டநாதர் வீதி, நல்லூர். (69162)

## விபத்தில் காயம

வவுனியா பறையனாலங்குளம் பகுதியில் விசேட அதிரடிப்படையினரின் வாகனமும், இராணுவ வாகனமும்மோதிக் கொண்டதில் ஐந்து படையினர் காயமடைந்துள்ளனர்.

நேற்று முன்தினம் பிற்பகல் 2.30 ணியளவில்இடம்பெற்ற இந்த விபத்தில் காயமடைந்த படையினர் வவுனியா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (இ-56-14)

### விற்பனைக்கு

1 ஸ்ரீ தொடர்பு இலக்கமுடைய மொறிஸ் மைனர் விற்பனைக்குணடு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி 160, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். கிழமை நாள்களில் காலை 8.00 மணிக்கு முன் பார்வையிடலாம். (69200)

### தையல் பயிற்சி

நவீன மரபு முறைகளில் உடைகள் வெட்டி தைப்பதற்குரிய குறுகிய காலப் பயிற்சி திங்கள், செவ்வாய், வியாழன் வகுப்புகள் 109/2, சட்டநாதர் வீதி, நல்லூர். (69163)

### காணி விற்பனைக்கு

கொழும்புத்துறை நெடுங்குளம் தண்டவாளத்துக்கு அருகாமையில் இருக்கும் 21 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு சி. தங்கராசா இல: 55, எழிலூர், துண்டி, எழிலூர். (69167)

### வீடு வாடகைக்கு

யாழ் நகரில் சகல வசதிகளுடனும் 3½ பரப்புக் காணி, யில் 8 அறைகள் கொண்ட வீடு 33, பலாலி வீதி, (Red Cross) அண்மையில் உடன் வாடகைக்கு உண்டு. திருமதி துரைரத்தினம், 67/1, குருசோ வீதி, சுண்டுக்குளி. (69179)

### கலர் மீன்கள் விற்பனை

கலர் மீன்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: A. அருளானந்தம் (குட்டி), 17, இராஜேஸ்வரி வீதி, நாயன் மார்கட்டு, யாழ்ப்பாணம். (மதியம் 12 மணிக்குப் பின்பு தொடர்பு கொள்ளவும்.) [69182]

### SPOKEN ENGLISH

சுலபமான முறையில் சிறுபிரிவாகஆங்கிலத்தில்கதைக்க பயில ஆசிரியர் ந. விக்னேஸ்வரன் ஆச்சாரி. நாகலிங்க சுவாமிகள் வீதி பிளாக் வீதி) சங்கானை [நாகலிங்க சுவாமிகள் நினைவாலயம் அருகில்] [69205]

## விற்பனைக்கு

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட
மேட்டுப் பாளையம்
புதிய உருளைக்கிழங்கு ஒருகிலோ
நாற்பத்தைந்து ரூபா மட்டுமே (45)

**நாதன் களஞ்சியம்,**
213C, ஆஸ்பத்திரிவிதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி இல, பக்ஸ் FAX } 2916

(69211)

## முரளி வீடியோ சென்ரர்

124, கன்னாதிட்டி றோட், யாழ்ப்பாணம்.

இதுவரை காலமும் 4, கன்னாதிட்டி வீதியில் இயங்கிய எமது ஸ்தாபனம் தற்பொழுது கன்னாதிட்டி காளிகோயிலுக்கும் Science Hall இற்கும் இடையிலுள்ள 124 ஆம இலக்கத்தில் இயங்குகிறது என்பதை வாடிக்கையாளர்கள், நண்பர்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

குறைந்த கட்டணத்தில் T.V, டெக், ஜெனரேற்றர், கசெற் ஆகியவற்றுடன் மினி சினிமாக்களுக்கு திரைப்படப் போஸ்ரருடன் வீடியோ பிரதிகள் விசேட கழிவுடன் வாடகைக்கு வழங்கப்படும்.

முரளி வீடியோ சென்ரர்

124, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம். (69216)

# கேள்வி அறிவித்தல்

## வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை, கரவெட்டி

கீழ்க் குறிப்பிடப்பட்ட வேலைகளுக்கான கேள்விகள் வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச சபையினால் 28-09-1999 ஆம் திகதி முற்பகல் 11.00 மணிவரை ஏற்றுக் கொள்ளப்பட்டு முற்பகல் 11. 30 மணியளவில் கேள்விச் சபையால் திறக்கப்படும்.

பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களும் அனுமதிக்கப்பட்ட உள்ளூர் பொது நிறுவனங்களும் கேள்விப் பத்திரம் கோருவதற்குக் தகுதி உடையவர்களாவர்.

கேள்விப் பத்திரங்களை வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேசசபைத் தலைமைச் செயலகத்தில் 27-09-1999 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள கேள்விப்பத்திரப் பணத்தையும் கேள்வி வைப்புப் பணத்தையும் செலுத்துவதன் பேரில் பெற்றுக்கொள்ளலாம். மேலதிக விவரங்களைப் பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்.

| | வேலை விவரம் | கேள்விப் பத்திரப் பணம் | கேள்வி வைப்புப் பணம் |
|---|---|---|---|
| 01. | வேதாரணியேஸ்வரா பாலர் பாடசாலை அமைத்தல் | ரூ. 250.00 | ரூ. 1000. 00 |
| 02. | பாரதிதாசன் சனசமூக நிலையம் புனரமைத்தல் | ரூ. 100.00 | ரூ 200. 00 |
| 03. | நெல்லியடி சனசமூக நிலையம் புனரமைத்தல் | ரூ. 50. 00 | ரூ. 150.00 |
| 04. | வேதாரணியேஸ்வரா சனசமூக நிலையம் புனரமைத்தல் | ரூ. 100.00 | ரூ. 200.00 |
| 05. | அந்திரான் சந்தை புனரமைத்தல் | ரூ. 250.00 | ரூ. 1000. 00 |

சி, பசுபதி,
செயலாளர்.

[சி/[illegible]]

## நன்றி கூறுகின்றோம்

12 - 09 - 99 ஞாயிற்றுக்கிழமை நல்லூர் சட்டநாதர் வீதி, இளங்கலைஞர் மன்றத்தில் நடைபெற்ற எமது திருமண வைபவத்தில் கலந்து சிறப்பித்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

திரு. ஸ்ரீஸ்கந்தராஜா
திருமதி விஜயகுமாரி.

ஸ்ரீகாந்த் எசன்ஸ்.
130, கே. கே. எஸ், றோட்,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல. 2219.

(69214)

## வெளிவந்துவிட்டது

தரம் 9, 10, 11 மாணவர்களுக்கான
ஆசிரியர் சங்கீத பூஷணம்
கா. பரமேஸ்வரன் எழுதிய
கர்நாடக சங்கீதம் பகுதி I வினா விடை
பயிற்சிப் புத்தகம் வெளிவந்துவிட்டது!

க.பொ. த. சா/தரம் பரீட்சை எடுக்கும் மாணவர்களுக்கு மிகவும் பயன்படக்கூடியது.

கிடைக்கும் இடங்கள்:

★ **சிவம் மெடிக்கல் பொத்தகசாலை,**
கச்சாய் வீதி, சாவகச்சேரி.

★ **சிவசக்தி பொத்தகசாலை,**
டச்சு வீதி, சாவகச்சேரி.

★ **சிதம்பரப்பிள்ளை பொத்தகசாலை,**
நெல்லியடி.

திரு. கா. பரமேஸ்வரன்
ஆசிரியர் சங்கீத பூஷணம்.

(சி/8996)

உ
சிவமயம்

## வாழ்த்துகின்றோம்



சைவத்திரு.

**தி. சுந்தரமூர்த்தி** தம்பதிகள்

**90 ஆவது பிறந்தநாளையும்**
**65 ஆவது திருமண வாழ்வையும்**

இன்று கொண்டாடும் எம் தாய் தந்தையரை இறைவன் திருவருளால் நீடூழி வாழ்கஎன வாழ்த்தி ஆசிவேண்டி நிற்கும்

பிள்ளைகள்

திரு. சு. வெற்றிவேலாயுதம்,
திருமதி அம்பிகாதேவி பத்மநாதன்,
திருமதி சயதேவி செல்வராஜன்,
திருமதி கலாதேவி பொன்னம்பலம்,
திருமதி சகுந்தலாதேவி சத்தியபாலன்,
திருமதி லோகபாலினி ஸ்ரீரங்கநாதன்,
பேரப்பிள்ளைகளும், பூட்டப்பிள்ளையும்.

யாமாவளவு,
[illegible]ப்பிள்ளையார் கோயிலடி,
தெல்லிப்பழை. (69213)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைப்பாறிய ஆசிரியரின் ஓய்வூதிய முரண்பாடுகள் நீக்கப்பட வேண்டும்

கொழும்பு, செப். 20

இலங்கை ஆசிரிய ஓய்வூதியர் சங்க மூன்றாவதுஆண்டு நிறைவுக் கூட்டம் கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது.

சங்கத் தலைவர் ந. பூ. முருகையா தலைமையில் இடம்பெற்ற மேற்படி கூட்டத்தில் அமைச்சர்கள் அல்ஹாஜ் ஏ. எச். எம். பௌசி, அல்ஹாஜ் அலவி மௌலானா உட்பட ஓய்வூதியர் திணைக்கள உதவிப் பணிப்பாளர் ரி.பி.குடாபண்டா, பிரதேச செயலர் ஜி. ஏ. ஜே. சில்வெஸ்ரர், இளைப்பாறிய அதிபர் பூ.க.இராசரத்தினம் ஆகியோர் கலந்து கொண்டு பயன் மிகு கருத்துக்களைத் தெரிவித்தனர்.

ஓய்வூதிய ஆசிரியர் சம்பந்தப்பட்ட சில முக்கிய பிரச்சினைகள் அமைச்சர்களின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதுடன் அவற்றை நிறைவேற்றித் தருமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டன. அவையாவன:-

★ 06- 10- 1994 ஆம் திகதிக்கு முன்பு சேவையிலிருந்து இளைப்பாறி ஓய்வூதியம் பெறுபவர்கட்கும், அத்திகதி தொடங்கி பின்பு இளைப்பாறி ஓய்வூதியம் பெறுபவர்க்கு மிடையே மாதாந்தம் பெறும் ஓய்வூதியத்தில் சுமார் ஆறாயிரம் ரூபா வித்தியாசம்காணப்படுகிறது. இவ் வேறுபாடு நீக்கப்படல் வேண்டும்.

★ 1995 ஆம் ஆண்டிற்குப் பின் பல்வேறு காரணங்களினால் வடக்கு கிழக்கிலிருந்து கொழும்பு வந்து தங்கியிருப்போரில் ஒரு பகுதியினர் தமது ஓய்வூதியத்தை இது வரையில் பெற்றுக் கொள்ளவில்லை. சுய விவரக் கோவை கொழும்பிற்கு வரவில்லை எனக் காரணம் கூறப்படுகிறது.

★5% ஓய்வூதிய பணிக் கொடை உயர்வு சகலருக்கும் வழங்கப்பட வேண்டும்.

★ பத்தாண்டு நிறைவுடன் நிறுத்தப்பட வேண்டிய ஓய் வூதிய பணிக்கொடைக் கழிவுகள் தொடர்ந்து கழிக்கப்படுதல் நிறுத்தப்படல் வேண்டும்,

★ தமிழ் தெரிந்த அலுவலர்கள் சம்பந்தப்பட்ட திணைக்களத்தில் வேலைக்கமர்த்தப்பட வேண்டும்.

★ விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியம் பெறுவோருக்கும் பணப் பற்றுச் சீட்டுக்கள் நேரே வழங்கப்பட வேண்டும்.

★ ஓய்வூதிய முரண்பாட்டு ஆணைக்குழு நியமித்து அவர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும்.

★ வெளிநாட்டில் வாழும் இலங்கையரின் ஓய்வூதிய கொடுப்பனவை கவனிப்பதற்கு என தனிப் பிரிவு அமைக்கப்பட வேண்டும்.

★ ஓய்வூதிய சுற்று நிருபங்கள் மூன்று மொழிகளிலும் வெளியிடப்படல் வேண்டும்.

## நேர்முகப் பரீட்சை

வேலணை, செப். 20

தீவக கல்வி வலயப் பணிமனையின் எல்லைக்குட்பட்ட பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர்களாக கடமையாற்றும் 60 தொண்டர் ஆசிரியர்களுக்கான நேர்முகப்பரீட்சை தீவக கல்வி வலயப் பணிமனையில் இன்றும் நாளையும் நடைபெற விருப்பதாக தீவக கல்வி வலயப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ள மேற்குறிப்பிட்ட 60 தொண்டர் ஆசிரியர்கள் தவிர்ந்த ஏனைய தொண்டர் ஆசிரியர்களுக்கும் காலக்கிரமத்தில் நேர்முகப் பரீட்சை நடத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதாகவும் அவர் தெரிவித்தார். (ஐ-167)

# புன்னாலைக்கட்டுவனில் ஆயுர்வேத ஆஸ்பத்திரி

சுன்னாகம், செப். 20

புன்னாலைக்கட்டுவனில் இலவச ஆயுர்வேத வைத்திய சாலையொன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளியன்று முற்பகல் 10 30 மணிக்கு வலி. தெற்கு பிரதேசசபைத் தலைவர் தி.மா. செல்வராசா இதனைத் திறந்து வைத்தார்,

'' நோய் வருமுன் அதற்கான தடுப்பு வழிகளை மேற்கொள்வது அவசியமாகும். அத்தகைய நடவடிக்கைகள் கிராம மட்டத்தில் மேற்கொள்ளப்படவேண்டும். இங்குள்ள ஏழைமக்கள் நோயற்று வளமாக வாழ வேண்டுமென்ற நோக்கிலேயே இலவச ஆயுர்வேத மருத்துவ மனை திறந்து வைக்கப்படுகிறது. மக்களுக்குத் தகுந்த சுகாதார சேவைகளை அமைத்துத் தருவது அவசியமாகும். அதனால் இவ்வகையான சுகாதார அமைப்புகளை உருவாக்குவதற்கு நாம் முன்னுரிமை அளிக்கத் தீர்மானித்துள்ளோம் '' என்று திறப்பு விழாவில் உரையாற்றும் போது பிரதேச சபைத் தலைவர் குறிப்பிட்டார்.

# காங்கேசனில் லங்காமுடித்த

யாழ்ப்பாணம், செப் 20

அத்தியாவசிய உணவுப் பொருள்களுடன் லங்கா முடித்த கப்பல் காங்கேசன் துறைமுகத்துக்கு வந்து சேர்ந்துள்ளதாக செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தக்கப்பலில் இரு லொறிகளும், ஒரு பவுஸரும் மற்றும் சில வாகனங்களும் எடுத்து வரப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த லொறிகளில் ஒன்று கால்நடை சுகாதார திணைக்களத்துக்கு வழங்கப்படவுள்ளதுடன் பவுஸர் தீவுப் பகுதிக்கான குடிதண்ணீர் விநியோகத்துக்குப் பயன்படுத்தப்படவுள்ளது என்று செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கப்பலில் இருந்து பொருள்கள் இறக்கும் வேலைகள் உடனடியாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பொருள்கள் இறக்கி முடித்ததும் இம்மாத இறுதியில் காங்கேசன்துறைக்கும் திருகோணமலைக்கும் இடையில் பயணிகள் போக்குவரத்துச் சேவையில் இந்தக் கப்பல் ஈடுபடுத்தப்படும். (இ-5)

## வீடு சேத நஷ்டஈடு

# 208 குடும்பங்களுக்கு 2ஆம் கட்டக், கொடுப்பனவு

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் வன்செயல்களால் வீடுகளை இழந்தவர்களுக்கான 25 ஆயிரம் ரூபா நஷ்டஈட்டுக் கொடுப்பனவின் இரண்டாம் கட்டக் கொடுப்பனவு 15 ஆயிரம் ரூபா மேலும் 208 குடும்பங்களுக்கு வழங்கப்படவுள்ளது.

ஆவரங்கால் மேற்கு கிராம சேவையாளர் பிரிவில் 32 பேருக்கும் —

அச்சுவேலி வடக்கு கிராம சேவையாளர் பிரிவில் 46 பேருக்கும் —

அச்சுவேலி தெற்கு கிராம சேவையாளர் பிரிவில் 48 பேருக்கும் —

தம்பாலை — கதிரிப்பாய் கிராம சேவையாளர் பிரிவில் 48 பேருக்கும் —

கல்வியங்காடு கிராம சேவையாளர் பிரிவில் 34 பேருக்குமாக மொத்தம் 208 பேருக்கு இக்கொடுப்பனவுகள் காசோலைகளாக அவரவரது வங்கிக் கணக்குக் களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்றும் உரியவர்கள் இன்று முதல் பணத்தை பெறமுடியும் எனவும் பிரதேச செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். [ஐ-180]

# சுன்னாகம் பகுதியில் கசிப்பு வேட்டை

சுன்னாகம், செப். 20

சுன்னாகம் பொலீஸார் பல்வேறு இடங்களிலும் மேற்கொண்ட கசிப்பு வேட்டையில் பெருமளவு கசிப்பு கைப்பற்றப்பட்டது.

வலி.தெற்கு பிரதேச சபைத் தலைவரின் முறைப்பாட்டைத் தொடர்ந்து பல இடங்களிலும் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

ஊரெழுப் பகுதியில் வெவ்வேறு மூன்று இடங்களில் திடீர் வேட்டையை நடத்திய பொலீஸார் பெருமளவு கசிப்பைக் கைப்பற்றினர்.

அப்புத்துரை சாந்தகுமார், குணரத்தினம் சரோஜா தேவி, சின்னையா நவரத்தினம் ஆகியோர் கைது செய்யப்பட்டு மல்லாகம் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர். இவர்களை விசாரித்த நீதிவான் இ.த. விக்னராஜா அவர்களுக்கு முறையே 10 ஆயிரம், ஐயாயிரம், 15 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார்.

இதேவேளை —

மயிலணிப் பகுதியில் இரு வீடுகளில் திடீர்ச் சோதனை மேற்கொண்ட பொலீஸார், கந்தசாமி சுபத்திராதேவி, பூபாலசிங்கம் இராசநாயகி ஆகியோரைக் கைது செய்து மல்லாகம் நீதிமன்றில் ஆஜர் செய்தனர். இவர்களுக்கு முறையே 15 ஆயிரம், 5 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதித்து நீதிவான் தீர்ப்பளித்தார். (ஐ-27)

# முன் பள்ளி கருத்தரங்கு

சுன்னாகம், செப். 20

மானிப்பாய் பிரதேச சபைக்கு உட்பட்ட முன் பள்ளிப் பெற்றோருக்கான கருத்தரங்கு கடந்த புதனன்று மாலை 3.30 மணிக்கு சோதி வேம்படி பாடசாலையில் நடைபெற்றது.

''முன் பள்ளிப் பாடசாலையின் வளர்ச்சியில் பெற்றோர் பங்கும், உளவியல் தாக்கமும்'' என்றதலைப்பில் வலி. தென்மேற்கு பிரதேச சபை அபிவிருத்தி உதவியாளர் எஸ். ரமேசும் 'முன் பள்ளிப் பிள்ளைகளின் வளர்ச்சி அபிவிருத்தி' என்ற தலைப்பில் வலயக் கல்வி அபிவிருத்தி உத்தியோகத்தர் இளமுருகனும் உரையாற்றினர். (ஐ-27)

# வாசகர் திருமுகம்

## பகுதிநேர ஆங்கில ஆசிரியர் கோரிக்கை நிறைவேறுமா?

ஆங்கில ஆசிரியர்கள் தட்டுப்பாடு காரணமாக ஆங்கிலத்தில் தகைமையுள்ள இளைப்பாறிய அரசாங்க ஊழியர்களும் ஆங்கிலத்தில் தகைமை பெற்றவர்களும் 1992 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் முதல் நியமிக்கப்பட்டு ஒவ்வொரு வருடமும் டிசெம்பர் மாத விடுமுறையுடன் சேவை முடிவுறுத்தப்பட்டு மீண்டும் அடுத்த வருடம் ஜனவரியில் மீள் நியமனம் வழங்கப்படுகின்றது.

அவர்களுக்கு பல்வேறு சேவை நிபந்தனைகளை விதித்து ஏனைய ஆசிரியர்களைப் போல பாடசாலை முழுநேரமும் பாடசாலையில் இருக்கவேண்டிய நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ஆனால் அவர்களுக்கு கடந்த ஏழு வருடங்களாக வழங்கப்பட்டு வருகின்றதோ நாளொன்றுக்கு 80 ரூபா மட்டுமே! அவர்களும் ஏனைய ஆசிரியர்களைப் போல கடமைகள் யாவற்றையும் செய்யவேண்டி உள்ளது. இந்தமுறை ஏனைய ஆசிரியர்களுக்கு97 ஆம் ஆண்டு இடர்காலக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்ட போது இவர்களுக்கு வழங்கப்படவில்லை.

கல்வி வலயத்தில் இடர்காலக்கொடுப்பனவு பற்றி விசாரித்தபோது பகுதிநேரமாகக் கடமையாற்றுவதால் வழங்க முடியாது என மாகாணக் கல்வி அமைச்சினால் பணிக்கப்பட்டுள்ளதாக விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

உரிய அதிகாரிகள் இந்தவிடயத்தை மறுபரிசீலனை செய்து உதவுவார்களா?

பல வழிகளிலும் கஷ்டமுறும் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களின் நியாயமான கோரிக்கை நிறைவேற்றப்படுமா?

– இ. ரவீந்திரராஜா

(பாதிக்கப்பட்ட பகுதிநேர ஆங்கில ஆசிரியர் சார்பாக)

## மாற்றுவழி இல்லையா?

பருத்தித்துறை இறங்குதுறையில் பொருள்களை ஏற்றிக்கொண்டு செல்லும் லொறிகள் பொருள்களைக் குறிப்பிட்ட இடத்தில் பறித்துவிட்டு அதற்கு என்று அமைக்கப்பட்ட சங்கத்தில் பதிந்துவிட்டு மீண்டும் பொருள்களை ஏற்றுவதற்கு பருத்தித்துறை இறங்கு துறைக்கு ஒழுங்கு அமைவாகப் பொருள்களை ஏற்றும் பணியில் ஈடுபடும்.

இதேசமயம் யாழ்ப்பாண உற்பத்தி பொருள்களை சில கப்பல் மூலம் கொழும்பு, திருகோணமலை போன்ற இடங்களுக்கு அனுப்பப்படுவது யாவரும் அறிந்த விடயமே. அப்படிப் பொருள்களை ஏற்றுவதற்கு லொறி உரிமையாளரிடம் சென்றால் எமது லொறி விட முடியாது அப்படி விட்டால் இருவார காலம் பொருள்களை ஏற்றி இறக்க அனுமதிக்க மாட்டார்கள். அப்படி பொருள்கள் ஏற்றுவது என்றால் கொழும்புப் பொருள்களை யாழ்ப்பாணத்தில் பறித்துவிட்டு பதியாமல் வரவேண்டும். பதியாமல் வந்து கப்பலுக்கு ஏற்றும் உள்ளூர் உற்பத்திப் பொருள்களை ஏற்றி இறக்கி விட்டு மீண்டும் லொறியுடன் யாழ்ப்பாணம் சென்று பதிந்து மீண்டும் வந்து கொழும்பில் இருந்து வரும் பொருள்களை ஏற்றி இறக்க வேண்டும் என தெரிவித்தனர். எனவே இந்த நடைமுறை நிச்சயம் நடைமுறைப்படுத்த வேண்டுமா! அல்லது மாற்று வழிகள் இல்லையா! சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதற்கு வாசகர் திருமுகத்தின் ஊடாக பதில் கிடைக்குமா? இல்லையா?

வி, சிவகுமார்

அல்வாய் வடக்கு,
அல்வாய்.

## 5ஆம் வகுப்பு வினாத்தாளில் குளறுபடி; மாணவர்கள் மத்தியில் குழப்பம்!

நடந்து முடிந்த 1999 ஒகஸ்ட் தரம் 5 க்கான புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாள் II இல் ஒரு விசித்திரம் உள்ளது.

மேற்படி வினாத்தாள் II இல் 31—40 வரையிலான வினாக்களுக்கு சரியாயின் ( ) என்ற அடையாளத்தையும் பிழையாயின் ( ) என்ற அடையாளத்தையும் எழுதுக என்று எழுதப்பட்டிருந்தது.

இவ்வினாவிற்கு சில மாணவர்கள் குறியீட்டிலும் சில மாணவர்கள் எழுதுக என்று கேட்கப்பட்டதால் எழுத்திலும் விடை அளித்துள்ளார்கள். இவ்வினாவின் விசித்திரத்தால் இப்போது மாணவர்கள் கலக்கத்துடன் உள்ளனர்.

இவ்வினாவானது உரிய தமிழில் (அடையாளம் இடுக அல்லது குறித்துக் காட்டுக) எழுதப்படாமையால் மாணவர் மத்தியில் பெரும் குழப்பத்தை ஏற்படுத்திவிட்டது.

எனவே தரம் 5 புலமைப்பரீட்சை விடைத்தாள்கள் திருத்தும்பணியில் ஈடுபடப்போகும் ஆசிரியர்கள் இந்த வினாவின் பிழையை ஆராய்ந்து இம மாணவர்களின் கலக்கத்தைப் போக்க இருபகுதி மாணவர்களுக்கும் உரிய புள்ளிகள் வழங்க வேண்டும்.

சோழியூரான் பிறைசூடிக்குரு
(ஓய்வு பெற்ற ஆசிரியர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயரப்புலம் — ஆனைக்கோட்டை

**ஐ. ச. ச. நிலைய**

வளர்ச்சி நிதிக்காக ஒழுங்கு செய்யப்பட்ட

## அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பு

08-09-99 ஆம் திகதி அன்று நல்லூர் ப. நோ. கூ. சங்கத் தலைவர் திரு. கனகசபாபதி, பங்குத் தந்தை அருட்திரு. அந்தோனிப்பிள்ளை ஆகியோர் முன்னிலையில் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்டது. அதிர்ஷ்டசாலிகளின் இலக்கம் பின்வருமாறு:—

1ஆம் பரிசு — இல. 11 2ஆம் பரிசு — இல. 3703
3 ஆம் பரிசு — இல. 27

ஆறுதல் பரிசில்கள்: 1309, 1109, 3072, 423, 4011.

பரிசிற்குரியவர்கள் வந்து பரிசை பெற்றுக்கொள்ளவும்.

ஐக்கிய ச. ச. நிலையம், தலைவர்.
உயரப்புலம், ஆனைக்கோட்டை. [69210]

## English Language Course

ஆங்கில மொழிப் பயிற்சி

A/L பரீட்சை எழுதிய மாணவருக்கும் வெளிநாட்டு வேலைவாய்ப்பை நாடுவோருக்குமான விசேஷ ஆங்கில மொழிப் பயிற்சி அடிப்படையிலிருந்து இலக்கணத்துடன் எழுத்து, வாசிப்பு, பேச்சுப் பயிற்சி உட்பட.

ஆரம்பம்: 24-09-99, ஆசிரியர்: M. P. SHAN.

**SUSHANTHIES ENGLISH ACADEMY**

23, DUTCH ROAD, CHAVAKACHCHERI.

[சி/9008]

## களவாடப்பட்டது

நல்லூர் புவிதா கிறீம் ஹவுஸ் தற்காலிக கடையில் இருந்து SONY B5CD 200W றேடியோ + கசற் செற் களவாடப்பட்டுவிட்டது. இது பற்றிய தகவல் அறிந்தோர் தயவுசெய்து கீழ்க்காணும்முகவரியில் தொடர்பு கொண்டால் (10,000/-) பத்தாயிரம் ரூபா சன்மானம் வழங்கப்படும்.

**புவிதா கிறீம் ஹவுஸ்**

56, மணிக்கூட்டு வீதி. யாழ்ப்பாணம்.

(69207)


## நன்றி நவிலல்

நவாலி தெற்கு

**அமரர் ஆ. பூகோணப்பர்**

அவர்களது இறுதிச்சடங்கில் கலந்து அஞ்சலி செலுத்திய உற்றார், உறவினர், நண்பர்கள், தேவரையாளி இந்துக் கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்.

(69201)

## 43-ம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 11 — 01 — 1962

மறைவு: 09 — 08 — 1999

**முருகன் செல்வராசா**

கோண்டாவில் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தின் 33 ஆம் கிளை அங்கத்தவரும். கிளைக்குழு உறுப்பினருமான

மு. செல்வராசாவின்

இழப்பு எமக்கெல்லாம் பேரிழப்பாகும். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இவரின் பிரிவால் துயருறும் மனைவி, பிள்ளைகள் ஆகியோருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பணிப்பாளர்கள், பணியாளர்கள், அங்கத்தவர்கள்.

கோண்டாவில் ப. தெ. வ. அ. கூ. ச.
தாவடிச்சந்தி (69191)


## இலவச இணைப்புடன்

வரவு செலவுத் திட்டத்துக்கு முந்திய

## விற்பனை

நீர் இறைக்கும் இயந்திரம் Enfield / Greaves MK - 12, MK - 25

இலவச இணைப்பு: சிங்கம் மார்க் மண்வெட்டி

**இலவச இணைப்புகள் கையிருப்பு உள்ளவரை மட்டுமே!**

விநியோகஸ்தர்கள்:

**ஆ. சி. பொன்னம்பலம் சக புத்திரர்**

**176, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.**

(69202)


## கேள்வி அறிவித்தல்

### சுகாதார சேவைகள் திணைக்களம்

### வைத்தியசாலைகளுக்கு சமைக்காத உணவுப் பொருள்களை வழங்குதல் - 2000

### பொது வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

01. கொழும்பு 10, பத்தேகம விமலவன்ச மாவத்தை, "சுவசிறிபாய" சுகாதார சேவைகள் திணைக்கள கேள்விச் சபையின் தலைவரினால் 2000 ஆம் ஆண்டிற்கு யாழ்ப்பாணம் பொது வைத்தியசாலைக்கு சமைக்காத உணவுப் பொருள்கள் வழங்குவதற்கான கேள்வி மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

02. கேள்விப் படிவங்கள் பெற்றுக் கொள்ளுதல்
கீழே காட்டப்பட்டுள்ள பெறுமதிக்குப் பொது 170 படிவத்தில் சொத்துக்கள் சான்றிதழைச் சமர்ப்பிப்பதுடன், கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்பவர்களும் யாழ்ப்பாணம் பொது வைத்தியசாலைப் பணிப்பாளருக்கு அல்லது கொழும்பு சுகாதார சேவைகள் திணைக்கள (பாதுகாப்பும் இணைப்பும்) (நிதி) பணிப்பாளருக்கு மீளளிக்கப்படாத வைப்புப் பணமான ரூபா 1,000 த்தைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளப்பட்ட பொது 172 படிவத்திலான பற்றுச் சீட்டைச் சமர்ப்பிப்பவர்களும் மட்டுமே குறித்த இரு பணிப்பாளர்களின் அலுவலகங்களிலும் கேள்விப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.
   01. வர்த்தக முயற்சியாயிருந்தால் பதிவு இலக்கம்.
   02. வருமான/பெறுமதிச் சான்றுப்பத்திரம் (பிரதேச செயலாளர் / மாவட்டச் செயலாளர்)
   03. கூட்டுறவு ஆணையாளரினால் சிபார்சு செய்யப்பட்ட, பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள்.

03. கேள்விப் படிவங்கள் பெற்றுக் கொள்ளக் கூடிய இடங்கள்:—
   1. யாழ்ப்பாணம் பொது வைத்தியசாலைப் பணிப்பாளரின் அலுவலகம்.
   2. கொழும்பு 10 சுகாதார சேவைகள் திணைக்களம் (பாதுகாப்பும் இணைப்பும்) (நிதி) பணிப்பாளரின் அலுவலகம்.

04. கேள்விப் பிணை (BID BOND) ரூபா 120, 000

05. கேள்விப் படிவங்கள் பெற்றுக் கொள்ள வேண்டிய முடிவு திகதி 1999—10—07 ஆந் திகதி பி.ப. 2.00 மணிவரை.

06. கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளுதலும் திறத்தலும் இடமும் — 1999—10—08 ஆந் திகதி மு.ப. 10.00 மணி, கொழும்பு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் அலுவலகம்.

07. அரசாங்க ஒப்பந்த நிபந்தனைகளை மீறியதால் கறுப்புப் புள்ளிகளைப் பதிவேட்டில் இடப்பட்டுள்ளவர்களுக்குக் கேள்விப் படிவங்கள் வழங்கப்படமாட்டாது.

08. முத்திரை இடப்பட்ட கேள்விப் படிவங்களை பதிவுத் தபால்மூலம் அனுப்ப வேண்டும் அல்லது நேரடியாகக் கையளிக்க வேண்டும். அத்துடன் கேள்விப் பிணையும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

09. வழங்கப்படவேண்டிய உணவுப் பொருள்கள் தொடர்பான விவரங்களை எதுவித கட்டணமும் இன்றி இவ் வைத்தியசாலை அலுவலகத்திலும் கொழும்பு 10 சுகாதார சேவைகள் திணைக்கள (பாதுகாப்பும் இணைப்பும்) (நிதி) பணிப்பாளரின் அலுவலகத்திலும் பார்வையிடலாம்.

10.

| வைத்தியசாலை | கேள்விப் பிணை ரூபா | சொத்துக்கள் சான்றிதழின் பெறுமதி ரூபா |
|---|---|---|
| 24, யாழ்ப்பாணம், பொது வைத்தியசாலை | 120,000 | 500,.000 |

தலைவர்
கேள்விச் சபை,
சுகாதார சேவைகள் திணைக்களம்,
"சுவசிரிபாய"
பத்தேகம விமலவன்ச மாவத்தை,
கொழும்பு — 10.

11. இவ் விளம்பரம், "தினகரன்" பத்திரிகையின் 11—09—99 ஆந் திகதி இதழில் பிரசுரிக்கப்பட்ட தீவு முழுவதற்குமான கேள்வி அறிவித்தலிலிருந்து, இவ் வைத்திய சாலைக்குப் பொருத்தமான பகுதியாகப் பிரசுரிக்கப்படுகிறது என்பதைக் கவனத்திற் கொள்ளவும்.

**வைத்திய கலாநிதி (செல்வி) நவமலர் கனகரத்தினம்**
பணிப்பாளர்

அரசினர் பொது வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.
1999—09—18

[சி/8999]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## பொறுப்பு அவர்களிடமே

அம்பாறை மாவட்டத்தில், உஹன பொலிஸ் பிரிவிலுள்ள புஞ்சிகிரிய என்ற இடத்தில் உள்ள மூன்று கிராமங்களைச் சேர்ந்த ஐம்பதுக்கும் மேற்பட்ட பொதுமக்கள் சுட்டும், வெட்டியும் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

அப்பாவிகளான, நிராயுத பாணிகளான சிங்களப் பொது மக்கள் மனித நேயமற்ற முறையில் கொல்லப்பட்டிருப்பது பெரும் கொடுமையாகும். இந்த அநாகரிகமான செயலை, மனித நேயமற்ற செயலை எவர் செய்திருந்தாலும், அது கண்டிக்கப் பட வேண்டியது.

பொது மக்களின் உயிர்கள், எவருடையனவாயினும் மதிப்பும் பெறுமதியும் மிக்கவை. அவற்றைப் பறிப்பதனால் எந்தப் பயனும் யாருக்கும் கிடைக்காது; எதனையும் எய்திவிடவும் முடியாது.

நாட்டின் அமைதி நீண்ட காலமாகவே குலைந்து போயுள்ளதால், அப்பாவிப் பொதுமக்கள், நிராயுதபாணிகள் உயிரிழக்கும் பாதுகாப்பு இல்லாத நிலை தொடர்ந்து வருகிறது. இனப்பிரச்சினைக்கு நீதியான, நியாயமான தீர்வு ஒன்றைக் காண்பதில் தாமதம் செய்யப்படுவதே அம்பாறைச் சம்பவம் போன்ற நிகழ்வுகளுக்கு மூல காரணம்.

அரசியல் தலைவர்கள் இதனைச் சிறிதும் உணராதவர்களாக, தெரிந்தும் தெரியாதவர்களாக, இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதனைக்கடந்த நாற்பது வருடங்களுக்கு மேலாகப் பின் தள்ளிப் போட்டு வருகிறார்கள். மக்கள் அழிவைத் தடுக்க வேண்டும் என்பதில் அக்கறை குறைந்தவர்களாக தமது அரசியல் நலனுக்கே முதலிடம் கொடுத்து வருவதன் விளைவுகளே இவை.

மக்களின பாதுகாப்பு உறுதி செய்யப்பட வேண்டுமானால், நாட்டில் அமைதி உருவாகுவது அவசியமானது. அந்த அமைதிக்கு சமாதானமே அத்திவாரம் போன்றது. சமாதானம் பிறப்பதற்கு இனப்பிரச்சினைக்குத் தீர்வு மிக மிக இன்றியமையாதது.

ஆனால் தென்னிலங்கை அரசியல் தலைவர்களோ இனப் பிரச்சினையைத் தமது அரசியல் நலனுக்கு மூலதனமாக்கிப் பிழைப்பு நடத்துகிறார்கள். இதனால் நாட்டுக்கும் மக்களுக்கும் அழிவே கிடைக்கின்றது என்பதனை கடந்த இருபது வருடங்களுக்கு மேலாக நேரில் கண்டும், உணர்ந்தும் இன்னமும் அரசியல் லாபம் என்ற பாதையை மாற்ற விரும்பவில்லை.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு கொண்டு வருவது என்ற இன்றைய அரசாங்கத்தின் முயற்சி எவ்வித நகர்வும் இன்றி நசிந்து போய்க் கிடப்பதற்கும் இதுவே காரணம், தீர்வு முயற்சி வெற்றி பெறுவதற்கு போர் நிறுத்தப்பட வேண்டும். போரை நிறுத்தாவிடில் அமைதியும் பிறவாது; சமாதானமும் மலராது,

அரசாங்கத்தினர் —ஆட்சியில் உள்ளவர்கள் — தாம் பெரும்பான்மை இனத்தவரைப் பிரதிநிதித்துவப்படுத்துபவர்கள், அவர்களின் வாக்குகளே தமது அரசியலுக்கு ஜீவாகாரம் என்ற உள்ளெண்ணத்துடன் செயற்படும் வரை—

தமிழ் மக்களின் அபிலாசைகளைப் புரிந்து கொண்டு, அவர்களுக்குரிய உரிமைகளை ஏற்றுக் கொண்டு நீதியான தீர்வு ஒன்றைக் காண்பது என்பது வெகுவெகு கடினம்.

தமிழ் மக்கள் கொன்று குவிக்கப்படுவதும் சிங்கள மக்கள் கொல்லப்படுவதும் நிறுத்தப்படவேண்டியவை, போரை நிறுத்தி இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டால் மேலே கூறியது சாத்தியப்படாத நிலையே தொடரும். அவற்றைச் செய்யும் பொறுப்பு அரசியல் தலைவர்களின் கைகளிலேயே உள்ள.

# சண்டிலிப்பாய் பிரிவில் 13 சமுர்த்தி அலுவலர்கள்

## இன்று முதல் கடமையேற்பு

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் நியமனம் பெற்ற 13 சமுர்த்தி அலுவலர்கள் இன்று திங்கட்கிழமை முதல் கடமைக்கென நியமிக்கப்பட்ட கிராம அலுவலர் பிரிவுகளில் கடமையாற்றவுள்ளனர்.

கீழ்வரும்சமுர்த்திஅலுவலர்கள் இன்றுமுதல் பின்வரும் நிலையங்களில் கடமையாற்றுவர்:

செல்வி. எஸ். ஜெயந்தி (ஜெ-130, சுதுமலை தெற்கு), திருமதி. எஸ். ரேவதி (ஜெ- 131, சாவற்கட்டு, பி. சசிகரன் (ஜெ-132 உயரப்புலம்), எஸ். சதீஷ் [ஜெ-134, நவாலி வடக்கு), ஆர். புகிலசிறி [ஜெ. 136 நவாலி தெற்கு[, ரி. ரவிச்சந்திரன் [ஜெ-137, மானிப்பாய் வடக்கு[, செல்வி. ஏ. பிலோமினா [ஜெ-138. மானிப்பாய் கிழக்கு], எஸ். பாஸ்கரன் [ஜெ-140, மானிப்பாய் மேற்கு], செல்வி. ஐ. தர்சிகா [ஜெ-142. சண்டிலிப்பாய் மத்தி], செல்வி. எஸ். விஜயசொரூபி[ஜெ-146 பண்டத்தரிப்பு], செல்வி வி. வதனி [ஜெ-147 பிரான்பற்று[, திருமதி. கே. றோகினி [ஜெ-154, மாரிசன் கூடல்], எஸ். ஜெயராஜ் [ஜெ-155, இளவாலை[.

மேற்படி அலுவலர்கள் கிராமிய மட்டத்தில் 'வறுமை ஒழிப்பு' [Poverty Eradictoion] சம்பந்தமான சமுர்த்தி நிவாரணத்திட்ட வேலைத் திட்டங்களை தத்தமது பிரிவுகளில் ஆரம்பிக்கவுள்ளனர்.

கிராமிய மட்டத்தில் மேற்கொள்ளப்படும் 'வளர்ச்சி – அபிவிருத்தி'' சம்பந்தமான அறிக்கைகளை புதன்கிழமைகளில் இடம்பெறும் பிரிவுக் கூட்டத்தில் இவர்கள் பிரதேச செயலருக்கு சமர்ப்பிக்க வேண்டுமென தெரிவிக்கப்படுகிறது. [ஐ-185[

# தலைநகரில் ரகசிய சித்திரவதை முகாம்கள்

## பொலீஸாருக்குத் தகவல்

கொழும்பு, செப்.20

கொழும்பு மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் பாதாள உலகக்கும்பல்களினால் ரகசிய சித்திரவதை முகாம்கள் நடத்தப்படுவதாக பொலீஸாருக்குத் தெரியவந்துள்ளது.

கிராண்ட்பாஸ் மட்டக்குழி உட்பட பல இடங்களில் இந்த சித்திரவதை முகாம்கள் இயங்குவதாகவும், அவற்றில் 12 முதல் 15 பேர் வரை தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் தகவல் தெரியவந்துள்ளதாக சிரேஷ்ட பொலீஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இத்தகைய சித்திரவதை முகாம்களில் ஒன்றைக் கடந்த 12 ஆம் திகதி அதிகாலை 2 மணியளவில் மாளிகாவத்தை பொலீஸார் கண்டுபிடித்துள்ளனர். கயிற்றால் கட்டி வைக்கப்பட்டிருந்த மூன்று இளைஞர்கள் அங்கிருந்து மீட்கப்பட்டனர். (ஐ-8)

# பெருமாள் கோயில் தேர் இன்று

யாழ்ப்பாணம், செப். 20

வண்ணை ஸ்ரீவெங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலய (பெருமாள் கோயில்) வருடாந்த தேர்த்திருவிழாஇன்று திங்கட்கிழமை காலை நடைபெறுகிறது

காலை 8.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும், காலை 10.15 மணிக்கு தேர்ப் பவனியும் இடம்பெறும்

நாளை செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு தீர்த்தோற்சவம் இடம்பெறும். (க)

# பாடசாலைக் கட்டடத் திறப்பு விழா

யாழ்ப்பாணம், செப்.20

உடுவில் மான்ஸ் தமிழ்க்கலவன் பாடசாலையின் தரம் 1 இன் கட்டடத் திறப்பு விழா கடந்த புதன்கிழமை இடம் பெற்றது.

பாடசாலை அதிபர் பொ. அம்பலவாணர் தலைமையில் இடம்பெற்ற மேற்படி விழாவில் உடுவில் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் அ. தற்பரானந்தன் பிரதமவிருந்தினராக கலந்து கொண்டார். (ஐ-ரி)

# சமூகச் சிக்கல்கள் காரணமாகவே பலருக்கு மனநோய் ஏற்படுகிறது

## உளநலச் சங்க வைபவத்தில் உரை

வலி. வடக்கு, செப். 20

மனநோய் என்பது பல வகையான சமூகச்சிக்கல்கள் காரணமாகவே ஏற்படுகின்றது. இத்தகைய நோய் தமக்கு வரமாட்டாது என்று எவரும் தட்டிக்கழித்துவிட முடியாது. இத்தகைய நோய்கள் ஏற்படுவதற்கான சந்தர்ப்பங்கள் எல்லோருக்கும் உண்டு.

மேற்கண்டவாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீட, மனநோயியல் போராசிரியர் தயா சோமசுந்தரம் தெரிவித்தார்.

தெல்லிப்பழையில் அமைந்துள்ள உளநல சங்கத்துக்கு தொலைக் காட்சிப்பெட்டி, டெக் மற்றும் விளையாட்டு உபகரணங்களை கையளிக்கும் வைபவமும் பாராட்டு விழாவும் தலைவர் க. கணபதிப்பிள்ளை தலைமையில் தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலையில் இடம் பெற்றன.

### மருந்து மட்டும் தீர்வு இல்லை

மனோவியல் பேராசிரியர் தயா சோமசுந்தரம் பேசுகையில் கூறியதாவது:–

இந்த வைத்தியமுறை ஏனைய வைத்தியமுறைகளில் இருந்தும் வேறுபட்ட ஒன்றாகும்.

மருந்துகள் மட்டும் இத்தகைய நோய்க்கு தீர்வாக அமையமாட்டாது. சாந்த வழிமுறைகளும் இவற்றுடன் இணைந்தவை ஆகும்.

பொதுவாக பலவகையான வாழ்க்கை, சமூகச் சிக்கல்கள், நெருக்கீடுகள் போன்ற காரணிகளால் மனநிலை குழப்பப்பட்டு இவர்கள் பாதிக்கப்படுகின்றனர்.

இத்தகைய நோயாளர்கள் சமூகத்துடன் சேர்ந்துவாழ நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். மற்றும் வேறு துறைசார்ந்த பயிற்சிகளும அளிக்கப்படவேண்டும்.

தற்போது இத்தகைய நோயாளர்களைப் பொறுத்த வரையில் பல பிரச்சினைகள் காணப்படுகின்றன. பல உபகரணங்கள் பொருள்கள் இல்லாத நிலை காணப்படுகின்றது.

இத்தகைய தேவைகளில் ஒரு பகுதியை பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்களும் மற்றும் யாழ். வர்த்தகப் பெருமக்களும் சேர்ந்து எமக்கு கையளித்துள்ளனர்.

காலத்துக்குக்காலம் நாம் பல்வேறு இடப்பெயர்வுகளுக்கும் உள்ளாகி இருக்கின்றோம். அப்போதெல்லாம் நாம் சிறுகச் சிறுக சேர்த்த பொருள்களையும் இழந்தே வந்துள்ளோம்.

ஆனாலும்கூட நாம் மீண்டும் மீண்டும் கட்டியெழுப்பிக் கொண்டே இருக்கின்றோம். அரசு ஓரளவுக்கு உதவி செய்கின்ற போதிலும் கூட நாம் அரசை முழுமையாக நம்பியிருக்க முடியாது.

சில தேவைகளைப் பொறுத்த வரையில் நாம் சமூகததையும் நாடவேண்டியுள்ளது. அவர்களும் எங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி, இங்கு நடப்பவற்றை உணரச் செய்யவேண்டும்— என்றார்.

### உளநலச் சங்கம் உதவி

க. கணபதிப்பிள்ளை தனது தலைமை உரையின்போது 1956 ஆம் ஆண்டு முதன் முதலில மனநோயாளர் வைத்தியசாலை காங்கேசன் துறையில் தந்தை செல்வாவின் முயற்சியினால் ஆரம்பிக்கப்பட்டது. இதன் வைத்திய நிபுணராக அருளம்பலம் கடமையாற்றினார்.

பின்னர் சிமெந்துக் கூட்டுத்தாபன நாடக மன்றம் மூலம் இத்தகைய நோயாளர்களிடையே நாடகங்கள், சமய சொற்பொழிவுகள், கூட்டுப் பிரார்த்தனைகள் போன்றவையும் நடத்தப்பட்டு வந்தன.

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலைக் கழிவுகள் நோயாளர்களுக்கு இடைஞ்சலாக இருந்தமையால் மீண்டும் தெல்லிப்பழைப் பகுதிக்கு இந்த வைத்தியசாலை இடமாற்றம் செய்யப்பட்டது. கடந்த காலங்களில் இந்த வைத்திய சாலை பல்வேறு இடங்களுக்கும் இடம்பெயர வேண்டிய அவல நிலை காணப்பட்டது.

தற்போதுகூட டாக்டர் சோமசுந்தரம் அவர்களின் விடாமுயற்சியினால் இன்றும்கூட மனநோயாளருக்கு சிகிச்சை அளிக்கக்கூடிய வாய்ப்பைக் கொண்டு இயங்கி வருகின்றது.

மனநோயாளர்கள் பராமரிக்கப்படவேண்டியவர்களாவர். அரசு மருந்து வகைகளையே தருகின்றது. ஆனால் நோயாளருக்கு வேண்டிய தலைக்கு வைக்கும் எண்ணெய் முதல் ஏனைய பொருள்களைத் தற்போதும் கூட உளநலச் சங்கமே வழங்கிவருகின்றது-என்றார்.

### மனநோயாளரை ஒதுக்க முடியாது

துர்க்கா துரந்தரி தங்கம்மா அப்பாக்குட்டி உரையாற்றும் போது மனநோயாளர் என்று எமது வாழ்க்கையில் ஒரு பகுதியினரை ஒதுக்கிவிடமுடியாது. எம்மில்கூடப்பலருக்கும் இந்நோய் உண்டு.

ஆனால் ஒருசிலர் வைத்தியசாலைக்கு வருகின்றார்கள். வன்னியிலும் கூட இத்தகைய நோயாளர்கள் அதிகமாகக்காணப்படுகின்றார்கள்

மனநோய். வறுமை, சகிப்புத்தன்மை இன்மை, குடும்பப் பிரச்சினை போன்றபல்வேறு காரணிகளாலும் ஏற்படுகின்றது.

நோயாளர்களாக அம்பாள் ஆலயத்திற்கு வந்து வைத்தியசாலை சென்ற பலர் நோய் மாறி ஆலயத்தில் தரிசனம் செய்ய வருவதைப் பார்த்து நான் மகிழ்ச்சி அடைந்துள்ளேன். இதற்கு நான் டாக்டர் மற்றும ஊழியர்களையும் பாராட்டுகின்றேன்.

மனநோயாளர் அபிவிருத்திக்கு உதவி செய்வது தெய்வீகப் பணி ஆகும். இவை மாத்திரமன்றி நாங்களும சேர்ந்து சாந்தம் அமைதி ஏற்படக்கூடிய வகையில் சமயப் போதனைகள், சொற்பொழிவுகளை ஏற்படுத்தவேண்டும் —என்றார்.

மற்றும் தெல்லிப்பழை மாவட்ட வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி சி. சிவரஞ்சினி மருத்துவமனை மன்றத் தலைவர் க. சுரேந்திரகுமார் உட்படப் பலர் உரையாற்றினார்கள். [இ-86]

## மக்களை காப்பதுந்தன் தொழிலேயன்றோ!

துன்பமதில் துணைபுரியும் செங்கண் மாலே
  துயரமது தடிந்தெம்மைக் காக்கும் கண்ணா
உன்கொடி எழுகையிலே போரின் கோஷம்
  எழுந்ததென்ன? எம்பாவப் பயனோ ஐயா? பின்னர்
குண்டுமழை பொழிந்தெங்கள் சோதரர்கள
  சாறாகிப் போயினரே! தவித்து நின்றோம்
வண்ணைநகர் மேவுதிரு வெங்கடேசா
  மக்களைக் காப்பதுந்தன் தொழிலேயன்றோ?

தேரின்று இவர்ந்தாய்நீ, திக்குஎட்டும்
  தெய்வஒளி பரவிடவே துன்பப்பூட்டின்
வேரின்றே அழிப்பதற்கே உலாவும் வந்தாய்
  வேதனைகள் பலதந்து எம்மை வாட்டும்
போர்நின்று போவதற்கு அருளே செய்வாய்
  புதியதொரு அமைதிநிறை நாட்டை நாங்கள்
நேர்கண்டு மகிழ்வதற்கு அருளுமையா!
  நின்னடியே சரண்புகுந்தோம் காப்பாய் கண்ணா!

– யோகேஸ்வரி சிவப்பிரகாசம்

[யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை ஸ்ரீவெங்கடேச வரதராஜப் பெருமாள் தேர் உற்சவம் இன்றாகும்]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## நாளை

புரட்டாதி 04
செவ்வாய்க்கிழமை
திதி: ஏகாதசி
மாலை 5.50 வரை
நட்சத்திரம்: உத்தராடம்
காலை 6.43 வரை
சுபநேரம்: 10.32 –12.02
ராகுகாலம்: 3.02 – 4.32
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## உதயவாக்கு

நமது உண்மை நங்கூரம் பாய்ச்சிய கப்பல் போல அமைதியுடன் இருக்க வேண்டும்.

– புத்தர்

# விமானப்பயண பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டவர்களின் விவரம்

யாழ், குடாநாட்டில் இருந்து வெளியிடங்களுக்கு விமான மூலம் பயணம் செய்ய பாதுகாப்பு அனுமதி வழங் கப்பட்டவர்களின் பெயர் விவரங்கள் உதயனில் தொடர்ந்து வெளியாகி வருவது தெரிந்ததே இம் மாதம் 15 ஆம் திகதி வரை அனுமதி வழங்கப்பட்டோ ரின் விவரங்கள் இன்று முதல் வெளியாகின்றன.

### சங்கானை

எஸ். விஜயகுமாரி (109950 ஏ), எச். புனிதவதி (114259 ஏ), பி. ஏ. றோலி (114259 பி), எஸ். சுதர்சன் (095692 பி), ஜி. ஜெயராஜா (102190 ஏ). சின்னக்கண்டு (112996 பி), எம் சிவசுப்பிரமணியம் (113078ஏ) கே. சதீசன் (114665ஏ), எஸ். சௌந்தர ராஜன் (114737ஏ), எஸ். லவக்குமார் (114744ஏ)

டபிள்யு. சிவக்குமாரன் (114864ஏ), கே. திருச்சிவம் (117010ஏ), எஸ். தன ராசா 117125ஏ), எஸ். இரத்தினசிங்கம் (117127ஏ), வை. சுதாகரன் (117128 ஏ), எஸ் சபாபதி (117189 ஏ), கே. ஆறுமுகம் (117225 ஏ), ஏ. செல்வரத்தினம் (117245ஏ), எஸ். பிருந்தா (117245பி), எஸ். துலர்கா (117245சி), வி. உதயகுமார் (117270ஏ), எஸ். தங்கராசா (117284ஏ)

எஸ். பிரசோபன் (114547 சி), எஸ். டிவகிஷ்ணா (114547 பி), எஸ். பிரிய வாகீசன் (114547 ஈ), எம். யோகராஜா (114566 ஏ), அனுஷா (114566 பி), எஸ். சடாட்சரம் (114568 ஏ), எஸ். சடாட்சரம் (114568 பி), ரி. மங்கள (114577 ஏ). எம். நேசசீலன் (114577பி), எம். விஜயபாலினி (114571 சி), வி. தனலக்சுமி (115591 ஏ), வி. கீத்திரகௌரி (115597 ஏ).

ரி. பிரபாகரன் (115597 பி), ரி. சரிதா (115597 சி), ரி. கிருபாகரன் (115597டி), ரி. தபோகரன் (115597 ஈ), கே. மாதவி (115606ஏ), கே. மாதினி 115606பி), டபிள்யு. குணாளன் (115608ஏ), ஜி. கமலேஸ்வரி (115608பி), ஜி. தில்பனானந்தன்(115608சி), பி. தவமணிதேவி (115610 ஏ), பி ஹரிகரன் (115610 பி). ரி. சரஸ்வதி (115624ஏ), வி. துரைராஜன் (115624பி).

ரி. சங்கீதா (115624சி), ரி. சீமா (115624பி), எஸ். அப் பையா (115630 ஏ), எஸ். கேசவன் (115630 பி), எஸ். சிவபாதசுந்தரம் (115631ஏ), எம். பாலசிங்கம் (115632 ஏ), பி. ராஜபாக்கியம் (115632பி), கே. ரதிகா (115643ஏ), எஸ். மாரிமுத்து (115643 பி), ஏ. நேசரத்தின குமாரி(115664ஏ), ஏ.ஜோன் சன் (115667ஏ), என். மரிய வசந்தா (115667 பி), என். நிமாலினி (115667 சி), ஏ. றொபின்சன் அமலதாஸ் (115667பி).

எஸ். கந்தசாமி (115671 ஏ), கே. சுதானந்தன் (115671பி), ஏ. சிவரஜனி (115675ஏ), எஸ். ரானியா (115676ஏ), எஸ். ரானியா 115676பி), எஸ். சுந்தரலிங் கம் (115677ஏ), எஸ். நிம்மி ராஜ் (115677பி), சி. ஆறு முகம் (115678ஏ), ஏ. பர மேஸ்வரி (115678பி), ஏ. ரமித்தா (115678சி), எஸ். நாகேந்திரன் (115679ஏ), எஸ். யளிந்தன் (115685 ஏ), என். வல்லியம்மா (115686ஏ)

ஆர். நமசிவாயம் (115686 பி), கே. விஜயபாஸ்கரன் (115691ஏ), ஐ. ஜெயதேவன் (115695ஏ), ஜே. தவமணி (115698ஏ), ரி. சபிதாலினி (115698பி), பி. துரைராஜ் (115699ஏ), மதிலர் (115699பி), வி. விவேகானந் தன் (115704ஏ), சந்திரமதி (115705ஏ), ரி. தயாவரூபன் (115706ஏ) என். தம்பு (115709ஏ), கே. பராசக்தி (115710ஏ), எஸ். கருணா னந்தம் (115713ஏ)

115713பி (பெயர் தெளி வில்லை), கே. கஜான் (115713சி), கே. வரகுணன் (115713டி), கே. சபாரட் ணம் (115715ஏ), ஆர். கீதா (115716ஏ), கே. கணபதிப் பிள்ளை (115717ஏ), (115721ஏ) (பெயர் தெளி வில்லை), (115722ஏ) பெயர் தெளிவில்லை), என். ரட் ணம்மா (115722பி), எஸ். ராஜசிங்கம் (115732ஏ), ஆர். ராஜ்பரந் (115732பி), எஸ். துரைராஜா (115736 ஏ), கே. நல்லதம்பி (115739 ஏ)

எஸ். செல்வநாயகம் (115742ஏ), எஸ். தாட்சா யணி (115742பி), எஸ். தாட் சாயணி (115742சி), ஆர். பரமசுவாமி (115743ஏ), எஸ். அமலராணி (115745 ஏ), வி. வீரவாகு (115748 ஏ), வி. ஜசிந்தா (115748 பி), எஸ். ஸ்ரீதரன் (115760 ஏ!, எஸ். இரவீந்திரன் 115763ஏ), எஸ். இரவீந்தி ரம் (115763பி), எஸ். செல்வ ராஜ் (115764ஏ), எஸ். ஜெய ராஜன் (115764பி)

எஸ். ஸ்ரீகாந்தி [115766 ஏ], ஏ. பரராஜசிங்கம் [115769ஏ], எஸ். மனோ ஜனி [115769பி], வி. மகேஸ் வரி [115784ஏ], என் சுப்பிர மணியம் [118476ஏ]. ஆர். செல்லத்துரை [118478ஏ], ரி. துரைராஜா [118487ஏ], ரி. மாலினி [118487பி], ரி. சிவபாதசுந்தரம் [118490 ஏ], எஸ். ஸ்ரீபாதசுந்தரம் [118490பி], எஸ். நாகராஜா [118491ஏ], எஸ். ஜெகநிதி [107826ஏ]

வி. நிரோயிதா(107826பீ), எஸ். சரோஜினிதேவி (107826சீ), ஆர். புவனேஸ் வரி(107827ஏ), ஆர். லோகினி (107827 பீ), ஆர். ஏசாக தளம் (112232 ஏ), ஆர். சுபாஸ்கரன் (112232 பீ), என். விஜபலக்ஷ்மி (112253 ஏ), யு. நடராசா(112253பீ), ஆர். நடராசா (112253 சீ), என். துஷ்பானந்தன் 112253 ஈ), என். மாதவன் (112253 எவ்), எஸ். சத்தியஜீவன் (112255 ஏ), கே. சிவராஜா (112255பீ).

கே. சுப்பிரமணியம்(114296 ஏ), எம் மகேஸ்வரன்(114303 ஏ), எம். அமலன்(114303பீ), என். ராசநாயகம்(114335ஏ), வி. முருகேசு (114347 ஏ), எம். தங்கமுத்து(114347பீ), பி. சற்குணமாதன் (114350 ஏ), (114353 ஏ) (பெயர் தெளிவில்லை), நே. சத்திய தேவி (114353பீ), கே. சுதர் சன் (114353 சீ), கே. சுலக் ஷன் (114353பீ).

என். சிவஹரா (114356ஏ), எஸ். பாலாம்பிகா (114351 பீ, ஜி. நல்லையா (114366 ஏ), வி. நவரட்ணசிங்கம் (114370 ஏ), பி. சிவஹண சுந்தரம் (114371ஏ), கே. மாணிக்கதியாகராஜா (117733 ஏ), எம். சரவண பவான் (117733பீ), பி. திரு வாதவூரார் (117734 ஏ), எஸ். பரமநாதன்(117744ஏ), என். சசிகலா (117747ஏ), ரி. ரவிராஜ் (117747 பீ), எஸ். நல்லராஜா (117747 சீ), எஸ். பாலசுந்தரம்(117748ஏ) பி. இறபேட் (117757 ஏ).

### சாவகச்சேரி

எஸ். கோணேசன் (109949ஏ), சி. இளங்குக ரன் (110439ஏ), பி. நாகரத் தினம் (118452ஏ), பி. நாம ரத்தினம் (118462ஏ). என், நந்தகுமார் (096762ஏ). ஜே. நையான் (101528ஏ), பி. தங்கராணி (101605ஏ), பி. சனூசன் (101605பி), பி. சுஜீவன் (101605சி), எம். கே. ஜீவகதாஸ் (105657ஏ), பி. பசுபதி (105657பி), ஜே. சஞ்சீவன் (105657சி),

எஸ். நிறாஜன் (105657டி), யு. கனகலிங்கம் (108503ஏ) என். கனகலிங்கம். (108503பி), பி. குகராஜா (110562ஏ), எஸ். ஜெபந்தினி (114480ஏ), கே. சின்னவ தம்பி (114480பி), எஸ். சிச். பாக்கியம் (114480சி), என் குணம் (114498ஏ), எச். அத் சியாமினி (114498பி), வி. சின்னப்பு (114514ஏ), ரி. சிவனேஸ்வரன் (114547ஏ), எஸ். உஜிந்தா (114547பி).

கே. பொன்னையா (117294ஏ), என். பொன் னையா (117294பி), பி. ஆனந்தவல்லி (117294சி), ஏ. சுப்பிரமணியா (117339ஏ), நகுலேஸ்வரி )117339பி), கே. சிவதாசன் )117389ஏ), எஸ். கார்த்தி .ஒர் (117389பி), எஸ். சிவரி கசாரூபி (117389சி), எஸ். எசலினுஜா (117389பி), சி முத்தையா (117401ஏ), வம். நந்தசெல்வம் 117401பி), கே. நந்தகுமா ரன் (117456ஏ), என். நளா யினி (117456பி), என்) நாராயணி (117456சி), ஜே. குட்டி (118461ஏ).

(தொடரும்)

# மக்கள் குடியமர அனுமதித்துவிட்டு பள்ளிகள், ஆலயங்களை திருத்துங்கள்

## வலி. வடக்கு ச. நிலைய சமாசம் கோரிக்கை

சண்டிலிப்பாய், செப் 20

வலிகாமம் வடக்கில் சில பகுதிகளில் மக்களை மீளக் குடியமர்வதற்கு அனுமதிக் காத நிலையில் அங்கு பாட சாலைகளையும், ஆலயங் களையும் புனரமைப்பு செய் வதில் அர்த்தமில்லை. மக் களை அவர்களின் சொந்த இடங்களில் குடியேற அனு மதியளித்துவிட்டு அங்கு புனரமைப்பு பணிகளை மேற் கொள்ள வேண்டும்

இவ்வாறு வலிகாமம் வடக்கு சனசமூக நிலையங் களின் சமாசம் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள மகஜர் ஒன்றில் கோரிக்கை விடுத்துள் ளது.

மக்கள் மீளக் குடியேறுத லும், பாடசாலைகள், ஆலயங் கள் திருத்துதலும் சமகாலத் தில் நடைபெற வேண்டும்- மாவிட்டபுரம், கொல்லங் கலட்டி, கீரிமலை, கருகம்பனை ஆகிய பகுதிகளில் மக்கள் மீளக்குடியேறுவதற்கு ஏற் பாடு செய்வதன் மூலம் மட் டுமே தெல்லிப்பழை மகாஜ னக் கல்லூரி போன்ற பாட யாலைகளைத் திறப்பதிலும், சரிமலை நகுலேஸ்வரர் ஆல கீத்தைப் புனரமைப்பதிலும் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலை புனரமைப்பதிலும் கிடைக்கும் பயனை விட அதிக பயன்கள் கிடைக்கும் என்று அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடபகுதி மீள் குடியேற்ற புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகார சபைத் தலைவருக் கும் இக் கடிதத்தின் பிரதி அனுப்பி வைக்கப்பட்டுள் ளது. (ஐ-135)


## வாழ்த்துகின்றேன்



17-09-99 அன்று யாழ். பதில் நீதிவான்

**திருமதி ச. இளங்கோவன்**

முன்னிலையில் சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்ட உரும்பிராய் வடக்கைச் சேர்ந்த

**திரு. சண்முகம் ஏகாம்பரநாதன்**

அவர்களை இதய பூர்வமாக வாழ்த்துகின்றேன்.

சிவஸ்ரீ மு. ஐயாத்துரை குருக்கள்

கற்பகவிநாயகர் ஆலய பிரதம குரு, உருப்பிராய்.

[69208]


## மின் இணைப்பு வழங்க ஏற்பாடு

வலி. தென்மேற்கு மானிப் பாய் பிரதேச சபைக்கு மின் சாரம் வழங்க சுன்னாகம்மின் அத்தியட்சகர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

மானிப்பாய் பிரதேச சபைத்தலைவர் வெலிச்சோச [illegible] அடுத்தே மின் வழங்கப்பட வுள்ளது. (ஐ-185)

# உரிய காலத்தில் 'சீசன் ரிக்கற்' கிடைக்காது மாணவர் பாதிப்பு

அச்சுவேலி, செப். 20

பாடசாலை மாணவர்களுக் கான பருவகாலப்பயணச் சீட்டுக்கள் (சீசன் ரிக்கற்) வழங்குவதில் தாமதம் ஏற் படுவதால் மாணவர்கள் சீசன் ரிக்கற்றுக்கு முன்கூட் டியே பணத்தைச் செலுத்தி விட்டு தினசரி பணம் கொடுத்து பயணம் செய்ய வேண்டி உள்ளதாகக் கவலை தெரிவிக்கப்படுகிறது.

யாழ். நகரில் உள்ள பிரபல பாடசாலைகளுக்குச் செல் லும் மாணவர்களின் வசதி கருதி பிரதான வீதிகளில் பாடசாலை பஸ் சேவை வட பிராந்திய போக்குவரத்துச் சபையால் நடத்தப்படுகின் றது.

இதற்கான சீசன் ரிக்கற்று கள் கோண்டாவில் டிப்போவி னால் பாடசாலைகளின் அதி பர்கள் ஊடாகவும் — நேரடி யாகவும் வழங்கப்பட்டு வரு கின்றன.

மாணவர்களின் பருவகாலச் சீட்டுக்கள் மாதத்தின் முத லாம் திகதியில் இருந்து பய ணம் செய்யக்கூடியதாக வழங்கப்பட்டு வந்தன.

கடந்த பல மாதங்களாக காலம் தாழ்த்தியே சீசன் ரிக் கற்றுக்கள் வழங்கப்பட்டு வரு கின்றன. ஒரு வாரம் முடிந் தும் கூட கிடைக்காத நிலை யும் காணப்படுகின்றது.

சீசன் ரிக்கற்றுக்கு முன்கூட் டியே பணத்தைச் செலுத்தி விட்டு நாளாந்த பணம் கொடுத்து பயணம் செய்வ தாக மாணவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

அச்சுவேலியில் இருந்து யாழ். நகரில் ஆகக் கூடிய தூரத்தில் அமைந்துள்ள சுண் டுக்குளி மகளிர் கல்லூரிக்குச் செல்வதற்கு சீசன் ரிக்கற் றுக்கு . 76 ரூபா 50 சதம் செலுத்தவேண்டும். ஆனால் தினசரி பணம் கொடுத்து பய ணம் செய்யும்போது நாளுக்கு 9 ரூபா செலுத்துகின்றனர். (ஐ—11)


## றோயல் அக்கடமி

சாவகச்சேரி

99 A/L DAY CLASS

பொருளியல்

[S. வரதராஜன்]

ஆரம்பம்: 21-09-99 செவ்வாய் 2.00 P. M.

A/L 2000 பொருளியல்

மீட்டல் வினாவிடை வகுப்பு

ஆரம்பம்: 21-09-99 செவ்வாய் 3.45 P. M,

[69215] நிர்வாகி.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஊர்காவற்றுறைப் பகுதியில் மீள்குடியமர்வு அலுவலகம்

காரைநகர், செப். 20

யாழ். மாவட்டத்தில் தீவுப் பகுதிகளை விசேட மீள்குடியேற்றப் பகுதிகளாகக் கருதி மீளக் குடியேறும் மக்களுக்குத் தேவையான சகல வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுப்பதற்காகவே ஊர்காவற்றுறையில் மீள்குடியேற்ற அலுவலகம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு யாழ். செயலகத் திட்டப் பணிப்பாளர் எஸ். மகாலிங்கம் தெரிவித்தார்.

தீவக மீள்குடியேற்ற அலுவலகத்தில் தீவகம் சம்பந்தமான தகவல் சமர்ப்பித்தல் நிகழ்வில் தீவக மீள்குடியேற்ற அலுவலகத்தின் உருவாக்கம், பின்னணி பற்றி உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

தீவக மீள்குடியேற்ற அலுவலக அதிகாரியும் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபருமாகிய ஜே. எக்ஸ். செல்வநாயகம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் எஸ். மகாலிங்கம் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:

செயலகத்தில் இருந்து கொண்டு தீவகத்தின் நிலைமைகளைக் கவனிக்க முடியாத காரணத்தால் தீவகத்தினை தனிப்பட்ட பிரதேசமாக கவனித்த இப்பிரதேசத்தின் அபிவிருத்தியை மேம்படுத்த சர்வதேச நிறுவனங்களின் வளங்களையும் அரசாங்கத்தின் வளங்களையும் ஒருங்கிணைத்து அபிவிருத்தியை மேற்கொள்வதே இந்த அலுவலகத்தின் நோக்கமாகும் —

தீவக மீள்குடியேற்ற அலுவலக வெளிக்கள உத்தியோகத்தர்கள் கடந்த இரண்டரை மாதங்களாக ஊர்காவற்றுறை. வேலணை, நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளின் கிராமங்கள் தோறும் சென்று மக்களுடனான பங்கேற்பு அணுகுமுறைக் கருவிகள் மூலம் கண்டறிந்த பிரச்சினைகளை அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் கல்விமான்கள் முன்னிலையில் சமர்ப்பித்தார்கள்.

தீவக மக்களின் நிலைமைகளையும் பிரச்சினைகளையும் எடுத்து விளக்கியதன் அடிப்படையில் இந்நிகழ்வில் பங்குபற்றிய அரச அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் அறிஞர்கள் பிரச்சினைகளுக்கான தீர்வு முறைகளை தாங்கள் ஊர்காவற்றுறை மீள்குடியேற்ற அலுவலகத்தின் ஊடாக மக்களுக்குச் செயற்படுத்துவதாக உறுதி வழங்கி உள்ளனர்.

யாழ் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளையும் இந்நிகழ்வில் கலந்து கொண்டார். அவர் அங்கு உரையாற்றுகையில் —

இங்கு 24 தீவுகள் உள்ளன. அவை 3 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளாக உள்ளன. இந்த மூன்று உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளும் மீள்குடியேற்ற அலுவலகத்தின் ஊடாக இணைந்து செயற்படுவது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். ஜி.ரி.இசற் நிறுவனத்தால் சிறிய வீடுகளே தீவுப் பகுதியில் கட்டிக்கொடுக்கப் படுகின்றன. ஆனால் இங்குள்ள பெரிய நாற்சார் வீடுகள் அழிந்து போகின்றன. தீவுப்பகுதியில் உள்ள வெளிநாட்டில் உள்ளவர்கள் தமது சொத்துபத்துக்களை தற்காலிகமாகவாவது தமது உறவினர்களுக்கு வழங்க வேண்டும். இவ்வாறு வழங்குவதன் மூலம் தீவுப்பகுதியில் குடியிருப்புப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் எனக்குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் தீவக வலயக் கல்விப்பணிப்பாளர் ப. விக்கினேஸ்வரன், ஐ நா.அபிவிருத்தித்திட்ட ஆலோசகர் க. றஞ்சன் ஊர்காவற்றுறை வேலணை, நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர்கள் உட்பட மற்றும் பலர் உரையாற்றினர். (ஐ-73)

## இலவச திருமணப் பதிவு

சண்டிலிப்பாய், செப். 20

மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகம் சாவற்கட்டு கிராமத்தில் சட்ட பூர்வ திருமணம் செய்து கொள்ளாதிருக்கும் 60 தம்பதிகளுக்கு இலவச திருமணப் பதிவை எதிர் வரும் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமையன்று நடத்தவுள்ளது.

சாவற்கட்டு மகாத்மா சன சமூக நிலையக் கட்டடத்தில் கழகத் தலைவர் டாக்டர் ப. உரோமகேஸ்வரன் தலைமையில் நடைபெறும். இந்த நிகழ்வில் வலயத் தலைவர் லயன் பா தவபாலன் பிரதம அதிதியாகவும் யாழ், மாவட்ட மேலதிக பதிவாளர் நாயகம் எஸ். சதாசிவஐயர் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர். வலி தென் மேற்கு விவாகப் பதிவாளர் என். கணேசதாசன் விவாகப் பதிவினை மேற்கொள்வார் [ஐ-135]

## யாழ். வலயத்தில் இடம்பெயர் சேவை

குருநகர், செப். 20

வடக்கு—கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் யாழ்.கல்வி வலயத்துக்கான இடம்பெயர் சேவை நாளை செவ்வாய்க்கிழமையும் நாளை மறுதினம் புதன் கிழமையும் யாழ்கல்வி வலயத்தின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற உள்ளது.

ஆசிரியர்கள். அதிபர்கள் மற்றும் கல்வித்திணைக்கள உத்தியோகத்தர்களால்யாழ். கல்வி வலயத்துக்கு வழங்கப்பட்டுள்ள முறைப்பாட்டுக் கடிதங்கள் இந்த இடம்பெயர் சேவையில் பரிசீலிக்கப்பட்டு முடிவுகள் எடுக்கப்பட உள்ளன. [ஐ-51]

## தீவக வலயத்தில் இடம்பெயர்சேவை

வேலணை, செப். 20

வடக்கு —கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் மற்றும் பதவி நிலை உத்தியோகத்தர்கள் கலந்து கொள்ளும் தீவக கல்வி வலயத்திற்கான இடம்பெயர்சேவை தீவக வலயக் கல்வி அலுவலகத்தில் — எதிர் வரும் 25ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணி தொடக்கம் மாலை 4.00 மணி வரை நடைபெறவிருப்பதாக தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

தீவக கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் கல்விசாரா ஊழியர்கள், வலயக்கல்வி அலுவலகத்தில் கடமையாற்றும் ஊழியர்கள் அனைவரினதும் நீண்ட காலமாகத் தீர்க்கபபடாதுள்ள பிரச்சினைகளை செயலாளர் நேரில் அறிந்து தீர்வுகாணும் முகமாகவே இந்த இடம் பெயர் சேவை ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். (ஐ-167)

# விளையாட்டு நிகழ்வுகள்

வலி. வடக்கு, செப். 20

வலிகாமம் கல்வி வலய தெல்லிப்பழைப் பிரிவுக்கு உட்பட்ட பாடசாலைகளுக்கிடையில் அளவெட்டி அருணோதயக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் 18 வயதுப் பிரிவில் சம புள்ளிகளைப் பெற்றுள்ள மல்லாகம் மகாவித்தியாலயமும் யூனியன் கல்லூரியும் இன்று மோதவுள்ளன. (இ-3-86)

★ ★ ★

வலிகாமம் கல்வி வலய சங்கானைப் பிரிவு பாடசாலைகளுக்கிடையே சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்றைய ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:

16 வயதுப் பிரிவு

★ சங்கானை சிவப்பிரகாசம் வித்தியாலயம் எதிர் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி.

18 வயதுப் பிரிவு

★ அராலி இந்துக்கல்லூரி எதிர் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி. (இ-86)

★ ★ ★

வலிகாமம் கல்வி வலய சண்டிலிப்பாய்ப் பிரிவு பாடசாலைகளுக்கிடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெறும் இன்றைய ஆட்டங்களில் கலந்து கொள்ளும் அணிகள் விவரம் வருமாறு:

16 வயதுப் பிரிவு

★ மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை எதிர் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி.

18 வயதுப் பிரிவு

★ மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை எதிர் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி.

## மிதிவெடியில் கால் இழப்பு

கைவிடப்பட்ட காவலரண் பகுதிக்குள் ஆட்டுக்குக் குழை வெட்டச் சென்றவர் மிதிவெடியில் சிக்குண்டு இடது காலை முழங்காலுக்குக் கீழ் இழந்தார்

அரியாலை ஆனந்தன்வடலி வீதிப் பகுதியில் நேற்று இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் சின்னத்தம்பி கந்தையா (வயது 78) என்பவரே காலை இழந்த நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# அமைச்சர் பதவியைத் துறப்பேன்! என்கின்றார் ரிச்சர்ட் பத்திரான

### சமவாய்ப்புச் சட்டமூலத்தினால் சர்ச்சை

கொழும்பு, செப். 20

அரசாங்கம் முன்வைக்கவுள்ள சமவாய்ப்புச் சட்டமூலம் அமுல் செய்யப்படுமானால் அமைச்சர் பதவியைத் துறப்பேன்.

மேற்கண்டவாறு கல்வி, உயர்கல்வி அமைச்சர் ரிச்சர்ட் பத்திரான அரசுக்கு அச்சுறுத்தல் விடுத்துள்ளார் என்று கொழும்புச் செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் நாடாளுமன்றத்தில் இந்தச் சட்ட மூலத்தை விரைவில சமர்ப்பிக்கவிருப்பது தெரிந்ததே.

கடந்தவார அமைச்சரவைக் கூட்டத்தில் இந்தச் சட்ட மூலத்தைக் கடுமையாக விமர்சித்த ரிச்சர்ட் பத்திரான இந்தச் சட்ட மூலத்தைத் தான் எதிர்க்கப் போவதாகத் தெரிவித்திருந்தார் என்றும் கூறப்படுகிறது. (இ-3)

## குருபூசை

யாழ்ப்பாணம், செப். 20

பெரிய குருநாதர் ஸ்ரீலஸ்ரீ சிவகுரு சின்னத்தம்பி சுவாமிகளின் குருபூசைத் தினமான இன்று காலை 9 மணி முதல் மறவன்புலோவில் உள்ள சுவாமிகளின் சமாதிமடத்தில் செல்வி மலர் பொன்னம்பலம் தலைமையில் விசேட பூசை, ஆராதனை. பஜனை ஆகியன இடம்பெறும். (இ-15)

## தொண்டர் ஆசிரியர் விவகாரம்

யாழ்ப்பாணம், செப். 20

தொண்டர் ஆசிரியர் சேவையில் உள்ளவர்களில் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படாதவர்கள் மற்றும் பட்டியலில் பெயர்இடம் பெறாதவர்கள் ஆகியோரை இன்று காலை 10 மணிக்கு தமது அலுவலகத்துக்கு உரிய ஆவணங்களுடன் வருமாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி யாழ். மாவட்ட செயலாளர் கேட்டுள்ளார். (இ-3-15)

# கத்தோலிக்க மாணவர் ஒன்றியம் கண்டன அறிக்கை

யாழ்ப்பாணம், செப். 20

யுத்தத்தில் ஈடுபடாத பொதுமக்கள் மீது வன்முறைகளைக் கட்டவிழ்த்து விடுவது மனித உரிமை மீறல் செயல் ஆகும். எனவே யுத்த நடவடிக்கைகளில் பொதுமக்கள் கொல்லப்படுவது தவிர்க்கப் படவேண்டும்.

புதுக்குடியிருப்பில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற விமானக் குண்டு வீச்சிலும் அம்பாறையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சம்பவத்திலும்பொதுமக்கள்படுகொலை செய்யப்பட்டது குறித்து யாழ்.பல்கலைக்கழக கத்தோலிக்க மாணவர் ஒன்றியம் விடுத்த அறிக்கைஒன்றில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

புதுக்குடியிருப்பில் குடியிருப்புப் பகுதி மீது நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலை நியாயப்படுத்தியும் அம்பாறையில் இடம்பெற்ற தாக்குதலுக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையிலும் அரசாங்கம் செயற்படும் விதம் எமக்கு ஆழ்ந்த கவலையைத் தருகின்றது.

அப்பாவிப் பொது மக்கள் மீது மேற்கொள்ளப்படும் தாக்குதல்களோ அவர்கள் படுகொலை செய்யப்படுவதோ சமாதானத் தீர்வை கொண்டுவர மாட்டாது.

எனவே அப்பாவிப் பொது மக்கள் மீது அம்பாறை, புதுக்குடியிருப்புப்பகுதிகளில் நடத்தப்பட்ட தாக்குதல்களைக் கண்டிப்பதோடு நாட்டில் அமைதி ஏற்பட வேண்டுமானால் சமாதானப் பேச்சுவார்த்தை மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படப்வேண்டும்.

இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ 7)

## சிப்பாய்கள் பிணையில் விடுவிப்பு

நெல்லியடி, செப். 20

வடமராட்சிப் பகுதியில் போதை வஸ்து வைத்திருந்த குற்றத்திற்காக இராணுவ பொலீஸாரினால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப் பட்டிருந்த இரண்டு இராணுவத்தினரும் தலா 10 ஆயிரம ரூபா ஆட்பிணையில் விடுதலை செய்யப்பட்டனர்

வடமராட்சி 524 பிரிகேட் பிரிவில் பணிபுரிந்துவந்த களுதந்திரி பத்திரனலாகே—சமண் அபேபத்திரன (வயது 25) ஏக்கநாயக முதியான் சலாகே — சரத் ஏக்கநாயக (வயது 23) ஆகிய இரு சிப்பாய்களும், கடந்த 12.4.99 ஆம் திகதியன்று, போதை வஸ்துவுடன், இராணுவப் பொலீஸாரினால் கைது செய்யப்பட்டு, இதுவரை காலமும் விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இவர்கள் இருவரும் கடந்த வெள்ளி காலை பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட சமயம் தலா 10 ஆயிரம் ரூபா ஆட்பிணையில் செல்ல மாவட்ட நீதிவான் இ.த. விக்னராஜா உத்தரவிட்டார்.

நாகர் கோயில் இராணுவ முகாமைச் சேர்ந்த மேஜர் கே.டி சீ.ஜீ. கே திலகரட்ண நீதிமன்றில் வந்து இவர்கள் இருவரையும் பொறுப்பேற்றுக்கொண்டுசென்றார். (ஐ-109)

## கருத்தரங்கு

தென்னைப் பயிர்ச்செய்கை பற்றிய கருத்தரங்கு ஒன்று இன்று நல்லூர் பிரதேச செயலர் அலுவலகத்தில் நடைபெறும்.

தென்னை அபிவிருத்திச் சபையினரால் நடத்தப்பட உள்ள இந்தக் கருத்தரங்கின் போது தென்னைப் பயிர்ச் செய்கை தொடர்பான படக்காட்சியும் காண்பிக்கப்பட உள்ளது. (இ-15-86)


மோட்டார் சைக்கிள்கள் விற்பனைக்கு வந்துள்ளன!

ஜப்பான் தயாரிப்புக்களான

௳ நவீன ஹொண்டா ௳ யமகா

இன மோட்டார் சைக்கிள்கள் வந்துவிட்டன.

- HONDA C 90 Lancer Custom Batch Model ( on lights )
- Lancer Custom - 90, 50 on light
- Yamaha Y C L S New Model
- Supercub - 90 Deluxe Model
- Supercub - 50 on light
- Chaly New Model
- Press cub - 50

கணபதி ஸ்ரோர்ஸ் இல. 40, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(2223)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org